ஆரம்பாசிரியர்கள், ஆரம்பப் பாடசாலை நிர்வாகிகள்
முன்னேற்றத்திற்கு உழைக்கும் இதழ்.

ஆசிரியர் : பி. வீரராகவன்

ஆண்டு சந்தா ரூ. 3.] [தனி இதழ் அணா 4

மலர் 20 | மே 1959 | இதழ் 5

ஆட்சியாளர்களின் சிந்தனைக்குரிய ஆறு தீர்மானங்கள்

முப்பது நாட்களோ இருபது நாட்களோ இல்லை. பத்து நாட்கள்கூட இல்லை. மாநாடு நடைபெறுவதற்கு இரண்டோர் நாட்கள் முன்னதாகத்தான் மாநாட்டின் அழைப்புத்தாள் தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளில் உள்ள உதவிபெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகளுக்குக் கிடைத்திருக்கிறது. அவ்வளவு குறுகிய கால அறிவிப்பைக் கொண்டு, தங்கள் தங்கள் வேலைகளை அப்படி அப்படியே விட்டுவிட்டு, திடீரென்று சென்னைக்கு விரைந்தோடி வருவதென்றால் மிக மிகச் சிரமமான செயல்தான். என்றாலும் தமிழகத்தின் வெவ்வேறு மாவட்டங்களிலிருந்தும், உதவி பெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள், தங்களுடைய சிரமத்தைச் சிறிதளவும் பொருட்படுத்தாமல் அணி அணியாகத் திரண்டு வந்தார்கள் சென்னை நகருக்கு! ஆமாம்! சென்னை நகரத்தில் கோகலே மண்டபத்தில் 25—4—59 அன்று நடைபெற்ற **சென்னை மாநில உதவிபெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் மாநாட்டிற்கு** நிர்வாகிகள் எட்டுத் திசைகளிலிருந்தும்

திரண்டு குழுமிய அந்தச் சீரிய காட்சியின் மாட்சியைத்தான் குறிப் பிடுகிறோம். மிகக் குறுகிய கால அறிவிப்பே கிடைத்திருந்தும், அதனால் ஏற்படும் தொல்லைகளைத் தூசுகள் என ஒதுக்கித் தள்ளி விட்டு, ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் கூட்டம் கூட்டமாக வந்து, மாநாட்டிற் கலந்துகொண்டு, அதனை இனிமையும் எழிலும் சுவையும் பயனும் மிகுந்த முறையில் நடத்திக்கொடுத்த கடமை உணர்ச்சியை யும் கட்டுப்பாட்டுப் பண்பையும் எவ்வளவு பாராட்டினாலும் தகும்.

மாநில மாநாடு மிகச் சிறந்த முறையில் நடைபெற்றிருக்கிறது. செந்தமிழ்ப் புலமை நிரம்பிய செம்மல்—**பேராசிரியர் டாக்டர் சிதம்பர நாதன்** அவர்களுடைய திறப்புவிழாச் சொற்பொழிவும், முதிர்ந்த அறிவும் நீண்ட அனுபவமும் படைத்த முன்னாள் நீதிபதி **உயர் திரு. இராமசாமி சாஸ்திரி** அவர்களுடைய தலைமையுரையும் மாநில மாநாட்டின் உயர்வையும் சிறப்பையும் மேலும் பல மடங்கு உயர்த்தியிருக்கின்றன என்றால் அது உண்மை; வெறும் புகழுரை அன்று.

மாநாட்டில் ஆறு தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டிருக்கின்றன. ஆறு தீர்மானங்களும் அரிய தீர்மானங்கள்; ஆரம்பக் கல்வி விரைந்து பரவவேண்டுமானால் அரசாங்கத்தார் ஏற்றுத் தீரவேண்டிய தீர்மானங் கள்; நடுநிலை உள்ளமும் நாட்டின் முன்னேற்றத்தில் நாட்டமும் படைத்த அத்தனைப் பேராலும் ஒப்புக் கொள்ளப்படக்கூடிய சிறந்த தீர்மானங்கள். அவசரக் கோலம் அள்ளித் தெளிக்கப்பட்ட வகையிலோ, ஆர அமர இருந்து ஆராய்ந்து பார்க்காத முறையிலோ, யார் எதைச் சொன்னாலென்ன—நாங்கள் கொண்ட பிடிவாதத்தை எப்படி விட்டுக்கொடுக்க முடியும் என்ற வகையிலோ வேகமான முறையில் நிறைவேற்றப்பட்ட விபரீதத் தீர் மானங்கள் அல்ல அவை. ஒரு முறைக்குப் பலமுறை எண்ணிப் பார்த்து, ஒருவருக்கொருவர் மனம் விட்டுப் பேசி, பல்வேறு பிரச் சினைகளையும் அலசி ஆராய்ந்து, மிகுந்த பொறுப்புணர்ச்சியோடு நிறை வேற்றப்பட்டுள்ள தீர்மானங்கள் அவை. உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளின் வரவு செலவு நிலைமையை நடுநிலை நெஞ்சத்தோடு ஆராய்ந்து பார்க்கும் நல்லோர் யாராயினும் சரி, அந்தத் தீர்மானங்கள் நியாயமானவை என்பதை மனமார ஒப்புக்கொள்வார்கள். அதில் ஒரு துளியும் ஐயம் இல்லை.

“ கட்டணம் வசூலிக்கும் ஆரம்பப் பள்ளிகள், கட்டணம் வசூலிக்காத ஆரம்பப் பள்ளிகள் என்று பாகுபடுத்தி அரசாங் கத்தார் பிறப்பித்துள்ள புதிய உத்தரவை 1960—61-ம் ஆண்டு வரை ஒத்திவைக்க வேண்டும் என்றும் அதுவரை தற்போது உள்ள திட்டத்தையே தொடர்ந்து நடைமுறையில் வைத்திருக்க

வேண்டும் என்றும் இந்த மாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்கிறது."

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட ஆறு தீர்மானங்களில் இது ஒன்று. இந்தத் தீர்மானம் முற்றிலும் நேர்மையானது என்பதை யார்தானாகட்டும் எப்படி மறுத்துவிடமுடியும்? அரசாங்கத்தின் புதிய உத்தரவால் ஏற்பட்டுள்ள பிரச்சினைகள் மிகப் பெரியவை. அந்த உத்தரவு ஆரம்பப் பள்ளி நிர்வாகிகளை மட்டுமே பாதிப்பன அல்ல. ஆயிரக்கணக்கான ஆரம்ப ஆசிரியர்கள், இலட்சக்கணக்கான மாணவ மாணவிகள், அந்த மாணவ மாணவிகளின் பெற்றோர்கள் ஆகிய அத்தனைப் பேரையும் பாதிக்கின்ற பிரச்சினைகள் அவை. அது மட்டுமா? அந்த மாபெரும் பிரச்சினைகளால் தமிழகத்தில் போதிக்கப்படுகிற ஆரம்பக் கல்வியின் தரமும் வளர்ச்சியுமகூடப் பாதிக்கப் படுகின்றன. இந்த மாநிலத்தில் அளிக்கப்படுகிற தொடக்கக் கல்வியின் எதிர்காலம், பேரொளி வீசித் திகழ்ந்து பூரிப்பையும் பெருமையையும் நமக்கு அளிக்குமா அல்லது இருள் நிறைந்ததாகவும் இடர் மிகுந்ததாகவும் குழப்பம் செறிந்ததாகவும் மாறிவிடுமா என்பதேகூட, மிகப் பெரிய அளவுக்கு உதவிபெறும் பள்ளிகளின் எதிர்காலத்தைத் தான் பொறுத்திருக்கிறது. இவ்வளவு பெரிய பிரச்சினையை ஒரு சிறு உத்தரவின் மூலம் அரசாங்கத்தார் அவசர அவசரமாகத் தீர்த்து விட முயல்வது எப்படி நியாயமாகும்? பள்ளி நிர்வாகிகள் - ஆரம்ப ஆசிரியர்கள்—நகர சபைகளின் பிரதிநிதிகள்—பெற்றோர்களின் பிரதிநிதிகள்—சட்ட மன்றத்தினர் கல்வித்துறை வல்லுநர்கள் ஆகிய அத்தனைப் பேரையும் கலந்து ஆலோசித்து நிதானமான முறையில் தீர்க்கவேண்டிய பிரச்சினை இது. இந்த உத்தரவின் அமுலைக் குறைந்தது ஓராண்டுக் காலத்திற்குத் தள்ளிப் போட்டால்தான் இந்த முறையில் பிரச்சினையை நின்று நிதானித்துப் பரிசீலனை செய்ய முடியும் எனவேதான் இந்தத் தீர்மானம், புதிய உத்தரவின் அமுலை 1960-61 வரை தள்ளிப்போட வேண்டும் என்று கேட்கிறது. நியாயம்தானே அப்படிக் கேட்பது?

"உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளின் கட்டிடங்கள், வாடகைக் கட்டிடங்களாக இருந்தால் அவற்றிற்குச் செலுத்தப்படுகிற வாடகைத் தொகையையும், சொந்தக் கட்டிடமாக இருந்தால் நியாயமான ஒரு வாடகைத் தொகையையும் அரசாங்கத்தார் நிர்வாகிகளுக்கு உதவித் தொகையாக (Grant) அளிக்க வேண்டுமென்று இந்த மாநாடு கேட்டுக்கொள்கிறது."

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட மற்றோர் தீர்மானம் இது. பள்ளிக்கூட நிர்வாகச் செலவுக்காக அரசாங்கத்தார் தருவதாகக் கூறுகிற 15 சதவிகித நிர்வாக உதவித் தொகையை மட்டும் வைத்துக்

கொண்டு, பள்ளிக்கூடத்தின் ஏனைய செலவுகள் எல்லாவற்றையும் நிறைவேற்றிவிட்டு, வாடகையையும் கட்டுவது என்றால், அது ஒரு நாளும் இயலாத செயலே ஆகும். கட்டிட வாடகை விஷம்போல ஏறிக் கிடக்கிற காலம் இது. குறிப்பாகவும் சிறப்பாகவும், சென்னை-திருச்சி—கோவை—மதுரை—சேலம் போன்ற நகரங்களில் கட்டிட வாடகை நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளர்ந்தபடி இருக்கிறது. இந்த வாடகையை, இதுவரை, பிள்ளைகளிடமிருந்து வசூலிக்கிற கட்டணத்திலிருந்து, சரிக்கட்டிவந்தனர் பள்ளிக்கூட நிர்வாகிகள். இனிமேல் கட்டணம் வசூலித்தல் ஆகாது என்று அரசாங்கம் கூறுவதால் இந்த வாடகைப் பொறுப்பு முழுவதையும் ஏற்றுக்கொள்ளவேண்டியது அரசாங்கத்தின் கடமையாகிறது. அந்தக் கடமையை அரசாங்கத்தார் அன்புகூர்ந்து நிறைவேற்றவேண்டும் என்பதைத்தான் இந்தத் தீர்மானம் எடுத்துக் காட்டுகிறது. எடுத்துக் காட்டத்தானே வேண்டும்? எடுத்துக் காட்டுவதுதானே முறை?

" உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளின் நிர்வாகச் செலவுக்காக அரசாங்கத்தார் 30 சத விகித நிர்வாக உதவித் தொகையை அளிக்கவேண்டும் என்று இந்த மாநாடு கேட்டுக்கொள்கிறது."

மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களில் இன்னொன்று இது. கட்டிட வாடகை உட்பட எல்லா நிர்வாகச் செலவுக்காகவும் மொத்தமாக 15 அல்லது 20 சத விகிதம் நிர்வாக உதவித் தொகை தருவதாக அரசாங்கத்தார் தெரிவித்திருக்கிறார்கள். ஆனால் அந்த 15 அல்லது 20 சத விகித உதவித் தொகை மிகமிகக் குறைவானது ஆகும். அந்த உதவித் தொகையைக் கொண்டு பள்ளி நிர்வாகிகள் கட்டிட வாடகையில் பாதியைத்தான் செலுத்த முடியும். மிச்சமுள்ள செலவுகள் எவற்றையும் ஈடுகட்டவே முடியாது. ஆகவேதான் மாநாடு, வாடகை முழுவதும் அரசாங்கத்தார் தருவதோடு, ஏனைய செலவுகளுக்காக 30 சத விகித மான்யமும் தரவேண்டும் என்று தீர்மானம் நிறைவேற்றி இருக்கிறது. பியூன்கள், ஆயாக்கள், தோட்டிகள், கட்டிடத்தைப் பெருக்கிக் கூட்டித் துப்புரவு செய்யும் வேலைக்காரிகள் ஆகியோர் ஊதியம், கல்விப் பயிற்சிக்கான தேசப் படங்கள்—கருவிகள்—வெண்சுண்ணத் துண்டுகள் முதலியன வாங்குதல், மேசை, நாற்காலி, கரும்பலகை முதலியன வாங்குதல், ஆசிரியர்களின் நல்வாழ்வு நிதிக்கு (T. P. F.) நிர்வாகிகள் செலுத்தவேண்டிய பங்கு, பள்ளிக் கட்டிடத்தைப் பழுது பார்த்தல்—சுண்ணம்படித்தல், தபாற் செலவு, அச்சுக் கூலி, குடியரசுத் திருநாள் முதலிய விழாக்களுக்கான செலவு ஆகிய இத்தனைச் செலவினங்களையும் வாடகையையும் ஒன்றாகச் சேர்த்து 15 சத விகித

உதவித் தொகைக்குள் சரிக்கட்டுவது எப்படி முடியும்? சிறிய பானைக்குள்ளே பெரிய யானையை நுழைக்க முயல்வது போன்ற செயல் அல்லவா இது? ஆகவேதான் அரசாங்கம் வாடகைத் தொகையைத் தனியாக அளித்துவிட்டு, 30 சத விகித உதவித் தொகையை ஏனைய செலவுகளுக்காக அளிக்கவேண்டும் என்று மாநாடு வேண்டிக் கேட்டுக் கொண்டிருக்கிறது.

"வாடகையையும், 30 சத விகித உதவித் தொகையையும் கொடுக்க அரசாங்கம் விரும்பவில்லையானால், அவற்றிற்குப் பதிலாக, கட்டணம் வசூலிப்பதை நிர்வாகிகள் இழப்பதால் ஏற்படும் நஷ்டத்தை, 1 முதல் 5 வரை உள்ள வகுப்புகளிற் பயிலும் எல்லாப் பிள்ளைகளுக்கும், முறையே, அணா 8, 10, 12, 14, ரூ. 1. என்கிற விகிதப்படி ஈடுகட்டித் தரும்படி இந்த மாநாடு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது."

மாநாட்டின் தீர்மானங்களில் வேறொன்று இது. வாடகையும் 30 சத விகித உதவித் தொகையும் தருவது என்கிற திட்டம் ஆட்சியாளர்களுக்கு ஒவ்வாததாகக் காணப்படுமாயின், அந்த இரு உதவித் தொகைகளைத் தருவதற்குப் பதிலாக, வேறு ஓர் முறைப்படி அவர்கள் நடந்துகொள்ளலாம என்று இந்தத் தீர்மானம் கூறுகிறது. வாடகையும் 30 சத விகித உதவித் தொகையும் தருவது என்பது ஒரு திட்டம். மேலே குறிப்பிட்டுள்ள முறைப்படி நஷ்ட ஈடு தருவது என்பது மற்றொரு திட்டம். இந்த இரு திட்டங்களில் ஆட்சியாளர்களுக்கு எந்தத் திட்டம் பொருத்தமானதாகத் தெரிகிறதோ அதனை அவர்கள் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் இரண்டு திட்டங்களில் ஏதாவது ஒன்றை அவர்கள் ஏற்றால்தான் ஆரம்பப் பள்ளிகள் சீரும் சிறப்புமாக நடைபெற இயலும் என்பது மட்டும் உறுதி.

"வாடகை உதவித்தொகை, நிர்வாக உதவித்தொகை ஆகியவற்றிலிருந்து நிர்வாகிகளின் குடும்பச் செலவுக்காக மிச்சம் எதுவும் இருக்காது. ஆகையால் அவர்களுக்கு மாதம் 100 ரூபாய் வீதம் கௌரவ ஊதியத் தொகை (allowance or honorarium) அளிக்கவேண்டுமென்று இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது."

மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள இந்தத் தீர்மானமும் முற்றிலும் நியாயமானதே. தங்களுடைய அறிவு ஆற்றல் முழுவதையும், நேரம் நினைப்பு அவ்வளவையும், சிந்தனை செயல் எல்லாவற்றையும் பள்ளிக்கூட வளர்ச்சிக்காகவே செலவிடும் நிர்வாகி, அவருடைய குடும்பச் செலவுக்குத் தேவைப்படும் குறைந்தபட்ச வருமானத்தை, அந்தப் பள்ளியின் வரவுத் தொகையில் இருந்துதானே எடுத்தாக

வேண்டும்? அதுதானே நியாயம்? அதுதானே முறை? அதுதானே ஒழுங்கு? அப்படியில்லாமல், அவர்கள் தங்கள் நேரம் முழுவதையும் பள்ளியின் வளர்ச்சிக்காகச் செலவிடவேண்டும்—ஆனால் அவர்களுடைய குடும்பச் செலவுக்காகப் பள்ளியின் வரவிலிருந்து காலணா கூட எதிர்பார்த்தல் ஆகாது என்று யாராவது கூறினால் அந்தக் கூற்று எப்படி நேர்மை மிகுந்ததாகும்? பள்ளியின் வளர்ச்சிக்காகவும் உழைத்துக்கொண்டு அதே நேரத்தில் தங்கள் குடும்பச் செலவுக்காக வேறோர் தொழிலிலும் அவர்கள் ஈடுபடவேண்டும் என்றால் அவர்கள் எப்படி முழுநேர நிர்வாகிகளாக இருக்கமுடியும்? அவர்கள் முழு நேர நிர்வாகிகளாக இல்லாவிட்டால் பள்ளியின் தரம் எப்படி உயர்வும் சிறப்பும் மிகுந்ததாகத் திகழும்? ஆகவேதான் மாதந்தோறும் குறைந்தது 100 ரூபாய் அவர்களுக்குக் கௌரவ ஊதியமாக அளிக்கப்படவேண்டுமென்று இந்தத் தீர்மானம் வேண்டிக் கேட்கிறது. அரசாங்கத்தார் அவசியம் ஏற்கவேண்டிய அரிய தீர்மானம் இது என்பது நம்முடைய திட்டவட்டமான கருத்து.

“ஆசிரியர்களின் ஊதியத் தொகையை அரசாங்கத்தார் நேரடியாகவே அவர்களுக்கு அனுப்பிவிட்டால் பள்ளிக்கூடத்தில் கட்டுப்பாடு குறைந்து திறமையின்மை அதிகரித்துவிடும். ஆதலால் எப்போதும்போல ஆசிரியர்களின் ஊதியத்தை நிர்வாகிகள் மூலமே அளிக்க ஏற்பாடு செய்யவேண்டுமென்று இந்த மாநாடு அரசாங்கத்தைக் கேட்டுக்கொள்கிறது.”

மாநாட்டுத் தீர்மானங்களில் மற்றொன்று இது. ஜூன் மாதத்திலிருந்து, கட்டணம் வசூலிக்காத உதவிபெறும் ஆரம்பப்பள்ளிகளின் ஆசிரியர்களுக்கு அரசாங்கத்தார் நேரடியாகவே ஊதியத் தொகையை அனுப்பிவைப்பார்கள் என்று அரசாங்கத்தார் அண்மையில் பிறப்பித்துள்ள உத்தரவு ஒன்று தெரிவிக்கிறது. அந்த உத்தரவால் ஏற்படக்கூடிய விபரீத விளைவுகளையே இந்தத் தீர்மானம் ஒளிவு மறைவின்றி எடுத்துக் காட்டி எச்சரிக்கை செய்துள்ளது. ஆசிரியர்களின் ஊதியத்தை, அரசாங்கம், மணியார்டர் மூலமாகவோ வேறு வழியிலாகவோ அவர்களுக்கு நேரடியாக அனுப்பிவிட்டால், அதன்பிறகு, ஆசிரியர்களை நிர்வாகிகள் எந்த வகையில் கட்டுப்படுத்த முடியும்? தவறாக நடந்துகொள்கிற ஆசிரியர்களை நிர்வாகிகள் எப்படிக் கண்டிக்க முடியும்? ஆசிரியர்களுக்கும் நிர்வாகிகளுக்கும் இடையே இப்போது இருந்துவருகிற உறவை—இணக்கமான நிலையை—பாசத்தை பற்றை வெட்டி வீழ்த்தும் நிலையினதாக உள்ளது அரசாங்கத்தின் இந்த உத்தரவு. அரசாங்கத்திடமிருந்து கிடைக்கும் ஆசிரிய ஊதிய உதவித் தொகையை உடனே ஆசிரியர்களுக்குக் கொடுக்காத நிர்வாகிகள் எங்கோ ஒருவர் இருவர் இருக்கக்கூடும்—இருக்கவே மாட்டார்கள் என்று நாம் கூறவில்லை. வேறு பல துறைகளிலே—

அரசாங்க அலுவலகங்களில் கூடத்தான்—தவறு செய்பவர்கள் இருப்பதுபோலப் பள்ளி நிர்வாகிகளும் சிலர் தவறான வழிகளில் துணிந்து செல்பவர்களாக இருத்தல் இயற்கை. யார் யார் அப்படி இருக்கிறார்களோ அவர்களைக் கண்டறிந்து அவர்கள்மீது அரசாங்கத்தார் தகுந்த நடவடிக்கை எடுக்கவேண்டியது முற்றிலும் நியாயம். ஆனால் யாரோ ஒருவர் இருவர் செய்யக்கூடிய தவறுக்காக எல்லா நிர்வாகிகளுக்கும் இப்படிப்பட்ட அவமானத்தை இழைப்பது ஒருநாளும் முறையாகாது. ஒரு சில நிர்வாகிகளின் தவறுக்காக எல்லா நிர்வாகிகளையும் தண்டிப்பதா? ஒரு மரம் தோப்பு ஆகுமா? ஊரில் உள்ள ஒரு மனிதன் தவறுசெய்தால் அதற்காக ஊரில் உள்ள அத்தனை மனிதர்களையும் தவறு செய்பவர்கள் என்று பழித்துப் பேசுவது ஒழுங்கான செயலா? சிந்தித்துப் பார்க்கப் பார்க்க இந்த உத்தரவில் அடங்கியுள்ள அநீதி மேலும் மேலும் விளக்கமாகத் தெரிகிறதே தவிர மங்கி மறைந்து அழிந்துவிடவில்லை. ஆகவே இந்த உத்தரவை எடுத்து எறிந்துவிட்டு எப்போதும்போல ஊதியத்தை நிர்வாகிகள் மூலம் அளிக்க முயல்வதே சாலச் சிறந்த ஏற்பாடாகும்.

மாநில மாநாட்டில் நிறைவேற்றப்பட்டுள்ள இந்த ஆறு தீர்மானங்களையும் தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள் அன்புகூர்ந்து ஏற்றுக் கொள்ளவேண்டும்-ஏற்று, அவற்றில் குறிப்பிட்டுள்ளபடி நிலைமைகளை மாற்றியமைக்க வேண்டும் என்பது நம் பணிவான வேண்டுகோள். இந்தத் தீர்மானங்கள் தெரிவித்துள்ள வழிகளில் நடந்து செல்ல ஆளும் அமைச்சர்கள் ஒப்புக்கொள்வார்களானால், ஆரம்பப் பள்ளிகளுக்கு ஏற்பட்டுள்ள பயங்கரமான நெருக்கடி அகன்றுவிடும்; நிர்வாகிகளின் நெஞ்சங்களை வாட்டி வதைக்கும் வேதனைகள் மறைந்துவிடும்; தொடக்கக் கல்வியின் வருங்காலம் ஒளி மிகுந்ததாகவும் எழில் நிறைந்ததாகவும் சிறந்து விளங்கும்.

மக்களின் உள்ளங்களை நன்கறிந்த முதலமைச்சர் உயர்திரு. காமராசர் அவர்களே! கல்வித் துறையில் இணையற்ற ஆர்வமும் அக்கறையும் கொண்டுள்ள கல்வியமைச்சர் உயர்திரு. சுப்பிரமணியம் அவர்களே! கல்வித்துறை இயக்குநராய் அமர்ந்து அரும்பணிகள் பல புரிந்துவரும் உயர்திரு சுந்தரவடிவேலு அவர்களே! இந்த ஆறு தீர்மானங்களையும் தயவுசெய்து அலசி ஆராய்ந்து பாருங்கள். ஆராய்ந்து பார்த்தால், அவற்றில் காணப்படும் பொறுப்புணர்ச்சியை, நியாயமான பாதையை, நேர்மைப் பண்பை நீங்கள் தவறாமல் ஒப்புக் கொள்வீர்கள் என்பது உறுதி. அன்புகூர்ந்து இத் தீர்மானங்களை நடைமுறைக்குக் கொண்டுவாருங்கள். தொடக்கக் கல்வியின் எதிர்காலத்தைச் சிறப்பு மிகுந்ததாக ஆக்குங்கள்.

அறிஞர்
சாக்ரடீசின் இறுதி நாள்

[சாக்ரடீஸ் கி. மு. 469-ஆம் ஆண்டு பிறந்தார்; கி. மு. 399-ம் ஆண்டு செத்தார்—இல்லை சாகடிக்கப்பட்டார். அவர் உண்மைக்காக உழைத்து உயிர்நீத்த பெருந்தகையாளர்; வரலாறு கண்டறிந்த மாவீரர்களிலே தலை சிறந்தவர். பரந்த நெற்றி, விரிந்த முகம், ஒளிர்ந்த கண்கள், உலர்ந்த தலை, வெள்ளைத்தாடி, குள்ளத்தோற்றம், பருத்த கழுத்து, தடித்த உடலம் ஆகிய இவற்றோடு, அழுக்கு நிறைந்த ஆடையுடன், ஏதென்ஸ் நகரத்தின் சந்தைக் கூடங்களிலும், சதுக்கமூலைகளிலும், சாலையின் ஓரத்திலும் ஓடையின் கரையிலும், உடற்பயிற்சியிடங்களிலும் ஊர்ப் பொது மன்றங்களிலும் ஓயாது அலைந்து திரிந்து கொண்டிருந்த அவ்வுரு அறியாதார் அந்த ஏதென்ஸ்நகரிலே அந்நாளில் யாரும்இல்லை என்னலாம். அறியாதார் மட்டுமல்ல; அவர் கண்டு பேசாதார் யாரும் இருந்திருக்கமாட்டார்கள். போவார் வருவாரைத் தடுத்து நிறுத்தி, அரசியல் ஒழுக்கம், தத்துவம் பற்றி வம்புக்கிழுத்து, வாதிட்டுநின்று, விளக்கங்கூறி, அன்னோர்க்கெல்லாம் அறிவு கொளுத்துவதே அவரது தொழில். அக்கால ஏதென்ஸ் நகரில் நின்று நிலவிய குடியாட்சி பற்றிய குற்றங் குறைகளையும் சமுதாய வாழ்விலுள்ள ஊழல் முறைகளையும் அவர் வன்மையாகக் கண்டித்து வந்ததால், அவர் ஆட்சியாளர்க்கும் ஆதிக்கக்காரர்க்கும் பகைவரானார்; குற்றம் சுமத்தப்பட்டார்; குற்றக் கூண்டிலே நிறுத்தப்பட்டார்; கொலைத்தண்டனை விதிக்கப்பட்டார்; கொடுநஞ்சூட்டிக் கொல்லத் தீர்மானிக்கப்பட்டார். சாக்ரடீஸ் நஞ்சூட்டிக் கொல்லப்பட்ட காட்சியை, அவருடைய மாணாக்கரிலே தலைசிறந்த பேரறிஞரான பிளேட்டோ அழகான சொல்லோவியமாகத் தீட்டி, உலகிற்கு அழியாப் பரிசாகக் கொடுத்துள்ளார். சாக்ரடீஸ் எப்படிப்பட்ட வாழ்க்கை ஈடேற்றி வந்தார் என்பதற்கு, அவர் எவ்வளவு உறுதியோடும், அமைதியோடும், களிப்போடும், கடமையுணர்ச்சியோடும் சாவை வரவேற்று நின்றார் என்பதே போதிய சான்றாகும். இதோ, பிளேட்டோ பேசுகிறார்.]

நாங்கள் உரையாடலை முடித்துக்கொண்டு எழுந்தபோது, கிரிட்டோ, "அப்படியே செய்கிறோம் சாக்ரடீஸ்! ஆனால் உங்களுடைய குழந்தைகளைப் பற்றியோ அல்லது வேறு எவையேனும் பொருள்கள் பற்றியோ, என்னிடத்திலோ அல்லது உங்கள் நண்பர்களிடத்திலோ, நீங்கள் இடவேண்டிய கட்டளைகள்

ஏதேனும் உண்டோ? எங்களாலான சிறந்த பணியினை உங்களுக்கு நாங்கள் எப்படியெல்லாம செய்ய வேண்டும்?'' என்று கேட்டான்.

"கிரிட்டோ! நான், எதைச் செய்யவேண்டும் என்று உன்னிடம் எப்பொழுதும் சொல்வேனோ, அதையே செய். உன்னைப்பற்றி நீ மிக்க அக்கறை எடுத்துக்கொள். எனக்கும், என்னைச சார்ந்தோர்க்கும், உனக்கும் உன்னால் எவ்வளவு பணி செய்ய முடியுமோ, இப்பொழுது அதுபற்றி நீ ஒரு உறுதிமொழியும் செய்யவில்லை என்றபோதிலும், அவ்வளவையும் செய்வாயாக. ஆனால், நீ உன்னைப் பொறுத்து அக்கறை கொள்ளாமலிருந்து, நாம் இன்றும், இதற்கு முன்பும் புரிந்த விவாதங்களில் குறிப்பிட்டபடி வாழ்க்கையின் நெறியைக் கடைப்பிடிக்காமல் போவாயேயானால், உன்னுடைய உறுதிமொழிகளெல்லாம், அவைகள் எவ்வளவு சிறந்தனவாகவும, உண்மையானவையாகவும் இருந்தபோதிலும், அவைகள் ஒன்றுக்கும் பயன்படா'' என்று சாக்ரடீஸ் கூறினார்.

அதற்குக் கிரிட்டோ, "எங்களால் ஆனதை யெல்லாம் செய்கிறோம். ஆனால் நாங்கள் உங்களை எப்படிப் புதைக்கவேண்டும்?'' என்று கேட்டான்.

சாக்ரடீஸ் அதற்கு, "உங்களுக்கு எப்படி விருப்பமோ அப்படிச் செய்யுங்கள். ஆனால், முதலில் நீங்கள் என்னைப் பிடித்து இருத்திக் கொள்ளவேண்டும்! நீங்கள் என்னை உங்களினின்றும் தப்பிப்போக விடக்கூடாது!'' என்று நகைச் சுவைபடக் கூறினார்.

எங்களை யெல்லாம் பார்த்துச் சிரித்துக் கொண்டே மேலும் அவர் சொல்லியதாவது; "நண்பர்களே! உங்களோடு பேசிக்கொண்டும், வாதங்களை ஒழுங்குபடுத்திக் கொண்டும் இருக்கும் நான்தான் சாக்ரடீஸ் என்பதை, இனிக் கிரிட்டோவை ஒப்புக்கொள்ளும்படி செய்ய என்னால் இயலாது என்றே கருதுகிறேன். இன்னும் சிறிது நேரத்தில் அவன் பிணமாகப் பார்க்கப்போகிற உடலம், நான்தான் என்று அவன் நினைக்கத்தொடங்கிவிட்டான்; அதனால் தான் என்னுடைய உடலை என்று கேட்காமல் என்னை எப்படிப் புதைக்கவேண்டும் என்று அவன் கவலைப்பட்டுக் கேட்கிறான். நான் நஞ்சினைக் குடித்ததற்குப் பிறகு உங்களோடு இருக்கமாட்டேன் என்பதையும், ஆனால் களிப்போடுகூடிய அமைதியான சூழ்நிலைக்குப் போய் விடுவேன் என்பதையும் எடுத்துக் காட்ட நான் கூறிய விளக்கங்கள் எல்லாம் கிரிட்டோவை மனம் வருந்தும்படி செய்துவிட்டன. வழக்கு நடக்கும்போது அவன் எப்படி எனக்கு உறுதி யளிப்போனாக இருந்தானோ, அப்படியே, ஆனால் வேறு மாதிரியில், நீங்களெல்லோரும் என் சார்பில் அவனுக்கு உறுதியளிப்போராக இருப்பீர்களா? நான் வாழ்வேன் என்ற நம்பிக்கையில்

அவன் எனக்காக உறுதியளிப்போனாக இருந்தான்; ஆனால் நான் இறந்துபட்ட பிற்பாடு நான் போய்விடுவேன், உங்களோடு வாழமாட்டேன் என்ற நிலையில், நீங்கள் என் சார்பில் அவனுக்கு உறுதியளிப்போராக இருக்க வேண்டும்; அப்பொழுதுதான் என் இறப்பைப்பற்றி அவன் அவ்வளவாக வருந்தாமலிருப்பான்; மேலும் என்னுடைய உடலம் எரிக்கப்படுவதையோ அல்லது புதைக்கப்படுவதையோ அவன் பார்க்கும்போது, நான் பயங்கரமான கொடுமைகளுக்கு ஆட்பட்டு வருந்துகிறேன் என்று நினைத்துத் துக்கப்படாமலிருப்பான்; மேலும் என்னுடைய ஈமச் சடங்கின்போது, சாக்ரடீசைத்தான் நாம் எடுக்கிறோம் அல்லது சுமக்கிறோம் அல்லது புதைக்கிறோம் என்று அவன் சொல்லிக்கொள்ளாமலிருப்பான்."

பிறகு கிரிட்டோவை அருகே அழைத்து, "அருமைக் கிரிட்டோ! சொற்களைக் குற்றம் பொருந்தும்படி பயன்படுத்துதல், அந்த அளவிலே தீமைபயக்கும் என்பது மட்டுமல்லாமல், உயிருக்கே பலவிதத் தீமைகளை உண்டாக்கும் என்பதை நீ அறிந்து கொள்ளவேண்டும். நீ நல்ல மனமகிழ்ச்சியோடு இருக்க வேண்டும்; அதற்குப் பிறகு என்னுடைய உடலைப் புதைக்கப்போகிறேன் என்று சொல்; நீ எதைச் சரியென்று நினைக்கிறாயோ, எது உன்னுடைய விருப்பமாகத் தோன்றுகிறதோ அந்தப் படிக்கு நீ அதைப் புதைக்கவேண்டும்" என்று கூறினார்.

இந்தச் சொற்களைச் சொல்லி முடித்தவுடன், அவர் எழுந்து, பக்கத்திலுள்ள அறைக்குத் தானே குளிக்கப்போயினார்; எங்களை வெளியே காத்திருக்கும்படியாகச் சொல்லிவிட்டு. கிரிட்டோ அவருடன் சென்றான். நாங்கள் அப்படியே வெளியே காத்திருந்தோம்; அவருடைய விளக்கத்தைப் பற்றிய பேசிக்கொண்டும், விவாதித்துக்கொண்டும் இருந்தோம்; எங்கள் மீது விழுந்திருந்த பெரிய துக்கத்தின் கொடுமையைப் பற்றியும், அவரின் அருமை பெருமைகளைப் பற்றியும் பேசிக் கொண்டிருந்தோம். நாங்கள் ஒரு தந்தையானை இழந்துவிடப்போவது போலவும், நாங்கள் மீதி வாழ்நாள் முழுவதும் அனாதைகளாக ஆக்கப்படப்போவது போலவும் அந்தச் சூழ்நிலை எங்களுக்குப் பட்டது. அவர் குளித்துவிட்டு வந்த போது, அவருடைய பிள்ளைகள் அவர் முன் கொண்டுவரப்பட்டனர். அவருக்கு இரண்டு பிள்ளைகள் இருந்தனர். அவர்களில் ஒருவன் சிறியவன், மற்றொருவன் சிறிது வயதானவன். அவருடைய குடும்பத்தைச் சேர்ந்த பெண்களும் வந்தனர். கிரிட்டோவின் முன்னிலையில் அவர் அவர்களோடு பேசிக் கொண்டிருந்தார். அவர்களுக்கு இறுதியாகச் சொல்லவேண்டிய கட்டளைகளையெல்லாம் சொல்லி

முடித்தார். பிறகு அந்தப் பெண்களையும், பிள்ளைகளையும் அனுப்பிவிட்டு, எங்களிடம் வந்து சேர்ந்தார். அப்பொழுது நேரம் ஞாயிறு மறைவதற்கு ஒரு மணிதான் இருந்தது. அவர் நீண்ட நேரம் உளளேயே போக்கிவிட்டதால், நாங்கள் அவரோடு பேசுவதற்கான பொழுதின் பெரும் பாகம் போய்விட்டது. அவர் குளியலிலிருந்து திரும்பி எங்களிடம் வந்து சேர்ந்தவுடன், கீழே உட்கார்ந்தார். ஆனால் அதற்குப் பிறகு அதிகம் ஒன்றும் பேசவில்லை. அப்பொழுது சட்டத்தை நிறைவேற்றுவதற்காக இருக்கும பதினொரு பேருக்கு வேலைக்காரனாக இருப்பவன் வந்து அவர் முன் நின்றான். அவன், "சாக்ரடீஸ்! நீங்கள் மற்றவர்களைப் போல் பொருளற்ற முறையில் நடந்துகொள்ளமாட்டீர்கள் என்பதை நான் அறிவேன் அதிகாரிகள் என்னைப் போய்க் கொடுக்கும்படி சொன்னார்கள் என்ற காரணத்துக்காக, நான் இதற்கு முன்பெல்லாம் வந்தவர்களிடம் கொண்டுபோய் நஞ்சினைக் கொடுத்து, குடிக்கும்படி சொன்னால், அவர்கள் என் மீது சினந்துகொண்டு வசைமாரி பொழிவார்கள். ஆனால், இதற்கு முன்பு இங்கு வந்தவர்களெல்லோரையும்விடச் சிறந்தவரும், பெருந்தன்மை வாய்ந்தவரும், மேன்மைபொருந்தியவரும் ஆன ஒருவருடன் உங்களெல்லோரையும் நான் காண்கிறேன். இப்பொழுது என்னிடம் நீங்கள் யாரும் சினந்துகொள்ளமாட்டீர்கள் என்று உறுதியாய் நம்புகிறேன். ஆனால் யார்மீது குற்றஞ் சுமத்தவேண்டும் என்பதை நீங்கள் தெளிவாக உணர்ந்திருப்பீர்கள் என்று கருதுகிறேன். ஆக சாக்ரடீஸ்! நான் நன்றி கூறிக் கொள்கிறேன்; நீங்கள் எவ்வளவு எளிதாக ஆக்கிக் கொள்ள முடியுமோ, அவ்வளவு எளிதாக ஆக்கிக்கொண்டு இதனைத் தாங்கிக் கொள்ளுங்கள். நான் ஏன் இங்கு வந்துள்ளேன் என்பதை, நீங்கள் அறிவீர்கள் என்று கருதுகிறேன்" என்று கூறிவிட்டு, அழுதுகொண்டே வேறுபக்கம் திரும்பி வெளியே போய்விட்டான்.

சாக்ரடீஸ் அவனை அண்ணாந்து பார்த்து, "நானும் நன்றி கூறிக் கொள்கிறேன்! நீ சொல்லியபடியே நான் நடந்துகொள்கிறேன்" என்று அவனுக்கு மறுமொழி கூறினார்.

பிறகு அவர் எங்களைத் திரும்பிப் பார்த்து, "ஆ! இந்த மனிதன் எவ்வளவு அன்புடையவனாகக் காணப்படுகிறான்! நான் இங்கேயே இருந்து காலங்கழித்து வந்த இத்தனை நாட்களிலெல்லாம், அவன் அடிக்கடி வந்து என்னைப் பார்ப்பது வழக்கம். சில நேரங்களில் என்னோடு பேசிக்கொண்டிருப்பான். நான் கண்ட மனிதர்களிலே மிகச் சிறந்த ஒருவனாக இருந்தவன் தான். அவன் இப்பொழுது எனக்காக எவ்வளவு இரக்கத்

தோடு அழுகிறான், பாருங்கள்! கிரிட்டோ! இங்கே வா. நாம் அவன் விருப்பத்திற்கிணங்கப் பணிவோம், நஞ்சு தயாராக இருந்தால், அதனைக் கொண்டு வரச் சொல்லலாம்; அது இன்னமும் தயாரிக்கப்படவில்லை என்றால் அது தயாரிக்கப்படட்டும்" என்று கூறினார்.

கிரிட்டோ அதற்கு மறுமொழியாக, "இல்லை, சாக்ரடீஸ்! ஞாயிறு மறைந்துவிடவில்லை; அது இன்னமும மலைமேல்தான் நிற்கிறது என்று கருதுகிறேன். மேலும் மற்றவர்கள எப்படி நஞ்சு அருந்தினார்கள் என்பதை நான் அறிவேன். அவர்கள், நஞ்சு கொடுக்கப்படப்போவது தெரிவிக்கப்பட்ட பிறகு, நீண்ட நேரம் மிக்க விருப்பத்துடன் சாப்பிட்டும், குடித்தும், நெருங்கி நண்பர்களின் கூட்டத்தை மனமகிழ்ச்சியோடு நுகர்ந்தும ஆன அதற்குப் பிறகுதான், நஞ்சு குடிக்க ஒருப்படுவார்கள். ஆகவே, நீங்கள் விரைவுபடாதீர்கள். இன்னமும் போதுமான நேரமிருக்கிறது" என்று கூறுகிறான்.

உடனே சாக்ரடீஸ், "கிரிட்டோ! நீ யார் யாரைப்பற்றியெல்லாம் சொல்லுகிறாயோ, அவர்களைப் பொறுத்து, அது இயல்பானதாகும். ஏனென்றால், அவர்கள் அப்படிச் செய்வதால் இலாபம் அடைந்தவர்களாகிறார்கள். நானே இயல்பாகவே அப்படிச் செய்யமாட்டேன். ஏனென்றால் சிறிது நேரங்கழித்து நஞ்சு குடிப்பதால், நான் அடையப்போகும் இலாபம் ஏதொன்றுமில்லை ஏற்கனவே கழித்துவிட்ட வாழ்வை, பேராசையின் காரணமாக இன்னும் சற்று நீடித்து வைத்திருப்பதிலே எனக்கு வெறுப்புதான் ஏற்படுகிறது. ஆகையினாலே நான் சொல்லுகிறபடி செய்ய நீ மறுக்காதே" என்று மறுமொழி கூறினார்.

பிறகு கிரிட்டோ, பக்கத்தில் நின்று கொண்டிருந்த தன் வேலைக்காரனுக்குக் கையினால் குறிப்புக் காட்டினான். உடனே வேலைக்காரன் வெளியே சென்றான். சிறிது நேரங்கழித்து அவன் ஒருவனை உடன் அழைத்துக் கொண்டு வந்தான் வந்த அந்த மனிதன் தன்கையிலே நஞ்சு தயாரிக்கப்பட்ட கோப்பையை ஏந்தியிருந்தான். சாக்ரடீஸ் அவனைப் பார்த்ததும் "என் அருமை நண்பரே! இது குறித்து நான் செய்யவேண்டிய செயல்களை நீங்கள் அறிவீர்களல்லவா? நான் இப்பொழுது என்ன செய்ய வேண்டும்?" என்று கேட்டார்.

உடன் அவன், "இதை முதலில் நீங்கள் குடிக்கவேண்டும். பிறகு உங்கள் கால்கள் உங்களுக்குக் கனமாகத் தோன்றுகிற வரையில் நடக்கவேண்டும். பின்னர் நஞ்சு தானே வேலை செய்யும்" என்று சொல்லிவிட்டு, சாக்ரடீசிடம் கோப்பையை நீட்டினான். சாக்ரடீஸ் கை நடுக்காமல், முகத்தின் நிறத்திலோ அல்லது முகத்தின்தோற்றத்திலோ மாறு

தல் ஏதும் காட்டாமல், மகிழ்ச்சி கலந்த முகமலர்ச்சியுடன் அந்த நச்சுக்கோப்பையை வாங்கினார். கோப்பையைக் கையிலே ஏந்திக் கொண்டு, அந்த மனிதனை உற்றுப்பார்த்து, "இந்த நஞ்சுத்துளிகளிலே ஏதேனும் கடவுளுக்கென்று கொடுக்க வேண்டுமா? என்ன சொல்லுகிறாய்? நான் கொடுக்க வேண்டுமா வேண்டாமா?' என்று கேட்டார். அதற்கு அவன் "சாக்ரடீஸ்! நாங்கள் உங்களுக்குப் போதுமானது என்று நினைத்த அளவேதான் தயாரித்துள்ளோம்" என்று மாற்றம் கூறினான்.

உடனே சாக்ரடீஸ்,"நான் இப்பொழுது எல்லாம் அறிந்து கொண்டேன். ஆனால் இனி நடைபெறப்போகும் என் பயணம், செழுமையாக இருக்கவேண்டும் என்று நான் கடவுளர்களை வேண்டிக்கொள்ள வேண்டும் என்பது சட்டப்படி நியதியல்லவா? என் பயணம் செழுமையாக இருக்க வேண்டும் என்பதுதான் என் விருப்பம். என் விருப்பம் ஈடேறுவதாகட்டும்!" என்றுமட்டும் கூறினார். இந்தச் சொற்களைச் சொல்லி முடித்தவுடனே, கோப்பையை அமைதியாகவும், மலர்ச்சியுடனேயும் உதட்டிலே வைத்து, அந்த நஞ்சினைப் பருகினார். அதுவரையில் எங்களிலே பலரும் தங்களுடைய துக்கத்தைக் கூடுமானவரையில் அடக்கிக்கொண்டிருக்க முடிந்தது. ஆனால் அவர் நஞ்சு குடிப்பதைப் பார்த்தபொழுதும் அவர் நஞ்சினைக் குடித்து முடித்துவிட்டார் என்று தெரிந்துகொண்டபொழுதும் துக்கத்தை எங்களால் அடக்கிக்கொண்டிருக்க முடியவில்லை. என்னையறியாமலேயே என்னுடைய கண்களிலிருந்து கண்ணீர்த்துளிகள் வெளிவந்தன; நான் என் முகத்தை மூடிக்கொண்டு அழ ஆரம்பித்துவிட்டேன். நான் அவருக்காக அழவில்லை; ஆனால் அவ்வளவு சிறந்த ஒரு நண்பரை இழக்கவேண்டிய நல்வாய்ப்பற்ற நிலைக்கு வந்துவிட்டேனே என்று எண்ணி அழுதேன். அதற்கு முன்னாலேயே கிரிட்டோவினால் அவனுடைய கண்ணீரை அடக்கிக்கொள்ள முடியவில்லை; அவன் அந்த இடத்தைவிட்டே அகன்றுவிட்டான். அப்பல்லடோரஸ் கடைசிவரையில் அழுகையை நிறுத்தினபாடில்லை; அவன் கோவெனக் கதறியழ ஆரம்பித்துவிட்டான். அவன் துக்கப்பட்டதும், செருமிச் செருமி அழுததும் எங்களெல்லோரையும் உரக்க அழும்படி செய்துவிட்டன. சாக்ரடீஸொருவரைத்தவிர மற்ற அத்தனைப்பேரும் அழுது கொண்டிருந்தோம்.

"என் நண்பர்களே! நீங்களெல்லோரும் என்ன செயல் செய்து கொண்டிருக்கிறீர்கள்?" என்று அவர் அதட்டிக் கேட்டார். மேலும் அவர் சொல்லும்போது, "இப்படிப்பட்ட செயலைச் செய்யக்கூடாது என்பதற்காகத்தானே, முக்கியமாக என் குடும்பப் பெண்களையெல்லாம் அனுப்பிவைத்தேன். ஒரு மனி

தன் சாகும்போது அமைதியான சூழ்நிலையில் சாகவேண்டும் என்று நான் கேட்டறிந்திருந்ததினாலேயேதான் அப்படிச்செய்தேன். ஆகையினாலே நீங்கள் அனைவரும் அமைதியாக இருங்கள்; துக்கத்தைத் தாங்கிக்கொள்ளுங்கள்'' என்று குறிப்பிட்டார்

நாங்கள் வெட்கப்படுவதற்குரிய செயலைச் செய்தோம் என்று கேட்டவுடனே, அழுகையை நிறுத்திக்கொண்டோம். ஆனால் அவர் அங்குமிங்கும் சிறிதுநேரம் நடந்தார். அவருடைய கால்கள் அவருக்குக் கனப்பதாக அவர் உணர்கிறவரையில் நடந்துகொண்டிருந்தார். பிறகு, முன்னர் சொல்லிக்கொடுக்கப்பட்டவாறு, படுக்கையில் மல்லாந்து படுத்துக்கொண்டார். பின்னர் அவருக்கு நஞ்சுகொடுத்த அந்த மனிதன் நிமிடத்திற்கு நிமிடம் அவருடைய அடிகளையும், கால்களையும் தொட்டுப் பார்த்துக்கொண்டேயிருந்தான். அதன் பின்னர் அவன் அவரது காலை மிக அழுத்தமாக அழுத்திப் பிடித்துக்கொண்டு, "நான் தொடுவதால் ஏதாவது உணர்ச்சி தெரிகிறதா!" என்று கேட்டான். சாக்ரடீஸ், "இல்லை!" என்று விடையிறுத்தார். பிறகு கால்கள் இரண்டும் மரத்துப்போயின; கொஞ்சம் கொஞ்சமாக மேலே மரத்துக்கொண்டேவந்தது; மரத்துப்போன பகுதிகள் சில்லென்றும், கடினமாகவும் இருந்தன. [illegible]விருந்து உடல் மரத்துக் கொண்டு வருதலைச் சாக்ரடீஸ் உணர்ந்தார்; அது இருதயத்தண்டை வரும்போது, தான் இறந்துபடுவேன் என்றும் குறிப்பிட்டார். அவருடைய உடல் சில்லிட்டு மரத்துக்கொண்டு வருகையில், அவர் தமது முகத்தை மூடிக்கிடந்த துணியைத் தம் கையால் அகற்றி விட்டுக்கொண்டு, கடைசி முறையாகப் பேசினார். அவர் கூறிய கடைசி சொற்களாவன : "கிரிட்டோ! நான் ஆஸ்கிளிபீஸ்ஸுக்கு ஒரு கோழி கடன்கொடுக்கவேண்டும்; அதைக் கொடுக்க மறந்துவிடாதே" எனபனவேயாகும்' அதற்குக் கிரிட்டோ, "அது அப்படியே செய்யப்படும். தாங்கள் விரும்புவது வேறு ஏதேனும் உண்டோ?" என்று கேட்டு' நின்றான். இந்தக் கேள்விக்கு அவர் மறுமொழி ஏதும் சொல்லவில்லை. ஆனால் சிறிது நேரம் கழித்த பின்னர் ஒரு அசைவு காணப்பட்டது; தலைசாய்ந்தது. அந்த மனிதன் மூடியிருந்த துணியை நீக்கிப் பார்த்தான். அவருடைய கண்கள் அசைவற்று நின்றிருந்தன. பிறகு, கிரிட்டோ அவருடைய வாயையும், கண்களையும் மூடினான்.

எகேக்ராடெஸ்! இதுதான் நமது நண்பரின் முடிவாகும். நான் பார்த்தவரையில், பேரறிஞரும், உண்மையானவரும், சிறந்தவரும்ஆனமனிதர், அவர் ஒருவரே என்றுதான் நான் கருதுகிறேன்!

—"மன்றம்"

சென்னை நகர மேயராகத்
தி. மு. க. அபேட்சகர் தேர்வு

புதிதாகத் திருத்தியமைக்கப்பட்ட நகர சபையின் மேயராக தி. மு. கழகத்தைச் சேர்ந்த திரு. அ. பொ. அரசு போட்டியின்றி தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார். திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சேர்ந்த ஒருவர் சென்னை நகர மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளது இதுவே முதன் முறையாகும்.

30-4-59 மாலை நடைபெற்ற நகரசபைப் புதிய கவுன்சிலர்களின் முதல கூட்டத்தில் இத் தேர்தல் நடந்தது.

உதவி மேயராகத் திரு. பி. சிவசங்கரன் (தி. மு. க., தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆயிரம் விளக்கு வட்ட உறுப்பினர் திரு. ஜி. கிருஷ்ணன் இவரை எதிர்த்துப் போட்டியிட்டார். திரு. கிருஷ்ணனுக்கு ஆதரவாக 4 ஓட்டுகளும், திரு. சிவசங்கரனுக்கு ஆதரவாக 50 ஓட்டுகளும் கிடைத்தன.

புதிய மேயரையும், உதவி மேயரையும் வரவேற்று, நகரசபைக் கமிஷனர் திரு. பாலசுந்தரம் தம் சார்பிலும் இதர அதிகாரிகள் சார்பிலும் வரவேற்று மலர் மாலை சூட்டினர்.

தியாகராயருக்கு அஞ்சலி

நகரசபைக் கூட்டம் சரியாகப் பிற்பகல் 2-45-க்கு ஆரம்பமாயிற்று. அதற்கு முன் திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் ரிப்பன் கட்டிடத்தின் முன்புள்ள சர். பி. தியாகராய செட்டியார் சிலைக்கு மாலை சூட்டி அஞ்சலி செய்தனர். தி. மு. க. பொதுச் செயலளர் திரு. நெடுஞ்செழியன், திரு. வி. முனுசாமி ஆகியோர் சிலைக்கு மாலைகள் சூட்டினர்.

சபை மண்டபத்தில் நடந்த பகிரங்கத் தேர்தலில் திரு. அ. பொ. அரசின் பெயரை திரு. வி. முனுசாமி முன் மொழிந்தார்.

கம்யூனிஸ்டு கட்சியைச் சேர்ந்த திரு. பி. கருப்பண்ணன் ஆமோதித்தார்.

வேறு போட்டியில்லாததால் திரு. அ. பொ. அரசு மேயர் பதவிக்குத் தேர்ந்தெடுக்கப்பட்டதாகக் கூட்டத் தலைவர் அறிவித்தார்.

பின்னர் அவரை அழைத்துச் சென்று மேயர் ஆசனத்தில் அமர்த்தி னர். மேயர் பதவிக்கான பட்டயத்தை திரு. அரசுக்குச் சூட்டினர்.

மேயர் திரு. அ. பொ. அரசு பாராட்டுகளுக்கு நன்றி தெரிவிக் கையில் தம்முன் உள்ள குறுகிய காலத்தில் சேரிவாழ் மக்களின் வாழ்வு நலம் பெறவும் நகரின் குடிநீர் பிரச்னை தீரவும் பாடுபட உறுதி ஏற்பதாகக் கூறினர்.

வைபவம் முடிந்து மேயர் திரு. அரசு ரிப்பன் கட்டிடத்துக்கு வெளியே வந்தபோது ஆயிரக் கணக்கான மக்கள் அவரைச் சூழ்ந்து கொண்டு வாழ்த்தொலிகள் கிளப்பினர்.

மேயர் வாழ்க்கை வரலாறு

மாநிலத் தலைநகரான சென்னையின் புதிய மேயராகத் தேர்ந்தெடுக் கப்பட்டுள்ள திரு. அ. பொ. அரசு ஒரு முன்னாள் குமாஸ்தா ஆவார். அவருக்கு வயது 35 ஆகிறது. இளம் பிராயத்தில் முத்தியால் பேட்டை உயர்நிலைப் பள்ளியில் கல்வி பயின்றார். மெட்ரிகுலேஷன் வரை படித்து பின் துறைமுகத்தில் குமாஸ்தாவாக வேலை செய்தார்.

அதனின்று வெளியேறி திராவிட முன்னேற்றக் கழகத்தில் அதிக ஈடுபாடு கொண்டார்.

அமைதியும் அடக்கமும் மிக்க இவர் செயலாற்றல் மிக்கவர் என்று கழகத்தாராலும் மற்றோராலும் பாராட்டப்படுகின்றவர்.

கடந்த நான்கு ஆண்டு காலமாகச் சிந்தாதிரிப்பேட்டை மக்களின் பணியாற்றியவர். நகரசபையில் நிதிக் கணக்குக் குழுவின் உறுப் பினராக இருந்து திறம்பட பணியாற்றினர்.

இவர் சொந்தத்தில் ஒரு அச்சகம் நடத்தி வருகிறார்.

துணை மேயர் சிவசங்கரன்

நுங்கம்பாக்கத்திலிருந்து புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட திரு. சிவசங்கரன் இதே வட்டத்தில் பிறந்து வளர்ந்தவர். பண்டிட் பழனி சாமி திராவிட இலவச பாடசாலையைத் தொடர்ந்து நடத்தி வருகிறார். 46 வயதான இவர் சென்னை தி. மு. க. உறுப்பினர்களில் முக்கியமானவர்.

—"நவ இந்தியா"

சென்னை மாநில

உதவிபெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் மாநாடு

25—4—'59



திருவாளர் ஏ. ஆர். சேஷாசலம்

அவர்கள் ஆற்றிய

வரவேற்புரை

இம் மாநாட்டின் தலைமைப் பொறுப்பை மகிழ்ச்சியுடன் ஏற்றுக் கொண்ட அறிவும் அனுபவமும் நிரம்பிய முதுபெருந் தலைவர் திருவாளர் இராமசாமி சாஸ்திரியார் அவர்களே!

செந்தமிழ் மொழியிற் சிறந்த புலமையும் மக்கள் நலத்தில் மட்டற்ற ஆர்வமும் படைத்த மாநாட்டின் சிறப்பாளர்—பேராசிரியர் டாக்டர் சிதம்பரநாதன் அவர்களே!

தமிழ்நாட்டின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அணி அணியாகத் திரண்டு குழுமியுள்ள உதவிபெறும் பள்ளி நிர்வாகிகளே!

உங்கள் அனைவரையும் வருக வருக என மனமார வரவேற்கின்றேன். மாநாட்டின் அழைப்புத்தாள் இரண்டோர் நாட்களுக்கு முன்னதாகத்தான் உங்களுக்குக் கிடைத்திருக்கும். என்றாலும் நீங்களெல்லாம் இவ்வளவு திரளாக வந்திருப்பதைக் காணும்போது நாம் மேற்கொண்டுள்ள பிரச்சினையில் நமக்கு வெற்றி கிடைத்தே தீரும் என்கிற நம்பிக்கை நிச்சயமாக எனக்கு ஏற்படுகிறது.

அண்மையில் தமிழ்நாட்டு ஆட்சியாளர்கள் பிறப்பித்துள்ள ஓர் உத்தரவின் காரணமாக உதவிபெறும் ஆரம்பப் பள்ளிக்கூடங்கள், மிகப் பெரிய நெருக்கடியில் சிக்கவைக்கப்பட்டிருக்கின்றன என்பதை நீங்கள் நன்றாக அறிவீர்கள். இந்த உத்தரவின்படி, உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகள், அரசாங்கத்தின் உதவித் தொகைகளைத் தொடர்ந்து பெறவேண்டுமானால், மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலித்தல் ஆகாது. அப்படியின்றி மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலிக்க அப்பள்ளிகள் விரும்பினால் அரசாங்கத்திடமிருந்து எத்தகைய உதவித் தொகையும் அவற்றிற்குக் கிடைக்காது. அரசாங்கத்தார் அறிவித்துள்ள இந்த இரண்டு வழிகளில் எந்த வழியிற் சென்றாலும் ஆரம்பப் பள்ளிகளைத் தொடர்ந்து நடத்துவது இயலாத செயலே ஆகும்.

அரசாங்கத்திடமிருந்து உதவித் தொகை எதையும் பெறாமல் மாணவர்களின் கட்டணத்தை மட்டும் நம்பி ஆரம்பப் பள்ளிகளை நடத்தவேண்டுமென்றால், மாணவர்களின் கட்டணத்தை மிக அதிகமான அளவுக்கு உயர்த்தியாக வேண்டும்—அப்படிச் செய்தால், மிகுந்த பொருள் வசதி படைத்த ஒரு சில பெற்றோர்களின் பிள்ளைகள் மட்டுமே பள்ளிக்கூடத்திற்கு வருவார்கள். அவர்களை மட்டும் வைத்துக்கொண்டு பள்ளிக்கூடத்தை நடத்துவது, முடியாத காரியம்.

"அது முடியாது என்றால், மற்றோர் வழி இருக்கிறதே—மாணவர்களிடமிருந்து கட்டணமே வசூலிக்காமல் அரசாங்கத்தின் உதவித் தொகைகளை வைத்துக்கொண்டு பள்ளிக்கூடத்தை நடத்துகிற வழி—அந்த வழியிற் சென்றால் என்ன?" என்று சிலர் கேட்கக்கூடும். பள்ளிக்கூடத்தை நடத்துவதற்கு நியாயமாகத் தேவைப்படும் செலவு முழுவதையும் அரசாங்கத்தார் ஏற்றுக்கொள்வதாக இருந்தால் இந்த வழியை நாம் தட்டாமல் தயங்காமல் ஏற்றுக்கொள்ளலாம். ஆனால் புதிய உத்தரவின்படி அரசாங்கத்தார் தருவதாகக் கூறுகிற உதவித் தொகையின் அளவு மிகக் குறைவு. நியாயமாக ஏற்படும் செலவின் அளவு மிக அதிகம். மாணவர்களிடமிருந்து கட்டணம் வசூலித்தல் கூடாது என்றால், இந்த அதிகப்படிச் செலவை எப்படிச் சரிக்கட்டுவது என்பதுதான் நமக்குப் புரியவில்லை. இந்தக் கேள்வியை நாம் பலமுறை எழுப்பியாகிவிட்டது. என்றாலும் மதிப்பிற்குரிய கல்வி

அமைச்சர் அவர்களோ, அன்பிற்குரிய கல்வித்துறை இயக்குனர் அவர்களோ, இதுவரையில் இந்தக் கேள்விக்கு எத்தகைய விடையும் அளிக்கவில்லை.

இந்தக் கேள்வி எவ்வளவு முக்கியமானது என்பதை விளக்குவதற்காக, எடுத்துக்காட்டுகளாக, இரண்டு ஆரம்பப் பள்ளிக்கூடங்களின் வரவு செலவுக் கணக்குகளை உங்கள் மனக்கண்முன் கொண்டு வந்து நிறுத்த விரும்புகிறேன்.

திருச்சி மாவட்டத்தைச் சேர்ந்த உதவி பெறும் ஆரம்பப் பள்ளி ஒன்றில் சென்ற ஆண்டில் ஐந்து ஆசிரியர்களும், 202 மாணவர்களும் இருந்தார்கள். இந்தப் பள்ளிக்கூடத்தை நடத்துவதற்குச் சென்ற ஆண்டில் செய்யப்பட்டிருக்கிற செலவுகளின் விவரம் இது :—

ஆசிரியர்களின் ஊதியம்	ரூ. 2634
,, பஞ்சப்படி	1622
பள்ளிக்கூடக் கட்டிட வாடகை	540
பள்ளிக் கட்டிடத்தைக் கூட்டிப் பெருக்கித் துப்புரவு செய்வோர், தண்ணீர் கொண்டுவருவோர் முதலியவர்களின் ஊதியம்	180
கல்விப் பயிற்சிக்குத் தேவைப்படும் கருவிகள், பண்டங்கள், வெண்சுண்ணத் துண்டுகள் முதலியன வாங்க	128
ஆசிரியர்களின் நல்வாழ்வு நிதிக்கு (T. P. F.) நிர்வாகிகள் செலுத்தவேண்டிய பங்கு	49
மாணவர்களின் சொற்பயிற்சிக் கழகம்; பள்ளிக்கூட விழாக்கள் முதலியவற்றின் செலவு	31
நூல் நிலையப் புத்தகங்கள், விளையாட்டுச்சாமான்கள், நாட்டுப் படங்கள், கருத்து விளக்கப் படங்கள் முதலியவற்றிற்கு	59
தபால் செலவு	31
ஆக மொத்தம் ஓராண்டுக்கு ஆகியுள்ள செலவு	5274

இந்தப் பள்ளிக்கூடத்திற்கு அரசாங்கத்தின் புதிய திட்டத்தின் படி கிடைக்கக்கூடிய வருமானத்தின் விவரம் :—

	ரூபாய்
ஆசிரிய ஊதிய உதவித் தொகை	2600
ஆசிரியர்களின் பஞ்சப்படிக்கான உதவித் தொகை	1596
நிர்வாக உதவித் தொகை (ஆசிரிய ஊதிய உதவித் தொகையில் 15%)	390
ஆக மொத்தம் ஓராண்டுக்குக் கிடைக்கக்கூடிய வருமானம்	ரூ. 4586

அரசாங்கத்தாரின் புதிய உத்தரவின்படி இந்தப் பள்ளிக்கூடத்திற்குக் கிடைக்கக்கூடிய மொத்த வருமானம் ஆண்டு ஒன்றுக்கு ரூபா 4586 ஆகும். இதே நேரத்தில் இந்தப் பள்ளிக்கூடத்திற்கு ஆகக்கூடிய மிகக் குறைந்த மிக நியாயமான செலவு ஆண்டு ஒன்றுக்கு ரூ. 5274 ஆகும். ஆகவே வரவைவிட செலவு 688 ரூபாய் அதிகப்படியாக இருப்பதைக் காண்கிறோம். அரசாங்கத்தார் 20 சத விகிதம் நிர்வாக உதவித் தொகை தருவதாக வைத்துக்கொண்டால், அந்தத் தொகையின் அளவு 520 ரூபாயாக இருக்கும். அப்போது ஓராண்டின் மொத்த வருமானம் 4716 ரூபாயாய் உயரும். அப்படி உயர்ந்தால்கூட, வரவை விடச் செலவு 558 ரூபாய் அதிகப்படியாக இருக்கும். மாணவர்களிடமிருந்து கட்டணமே வாங்கக்கூடாது என்று ஆட்சியாளர்கள் தெரிவித்தால் இந்தத் துண்டு விழும் தொகையை ஈடுகட்டுவதற்குப் பள்ளி நிர்வாகிகளுக்கு எந்தவித வழியும் இல்லை. அப்படியானால் அவர்கள் பள்ளிக்கூடத்தைத் தொடர்ந்து நடத்துவது எப்படி?

மற்றோர் உதவிபெறும் ஆரம்பப்பள்ளி—இது, மதுரை மாவட்டத்தைச் சேர்ந்தது—புதிய உத்தரவால் இந்தப் பள்ளிக்கூடம் எப்படிப் பாதிக்கப்படுகிறது என்பதைக் கவனிப்போம்.

இந்தப் பள்ளிக்கூடத்தில் சென்ற ஆண்டில் நடைபெற்ற செலவுகளின் விவரம்:—

	ரூபாய்.
ஆசிரியர்களின் ஊதியம்	3978
„ பஞ்சப்படி	2545
கட்டிட வாடகை	764
ஆயா ஊதியம் (மாதம் ரூ. 15 வீதம்)	180
குப்பைக்காரன் ஊதியம் (மாதம் ரூ. 5 வீதம்)	60
தண்ணீர் கொண்டு வருபவர் ஊதியம் (மாதம் ரூ. 3 வீதம்)	36
மேசை, நாற்காலி, கரும்பலகை முதலியவற்றைச் செய்யவும், பழுதுபார்க்கவும்	166
காகிதம் பென்சில் முதலிய சில்லறைச் சாமான்கள்	57
விளையாட்டுகளுக்கு	15
பத்திரிகைகள்	25
முதல் சிகிச்சைக் கருவிகள்	5
தபால் செலவு	23
அரசாங்க உதவித் தொகை செக்கை மாற்ற	27
குடியரசுத் திருநாள், பெற்றோர் நாள் முதலிய விழாக்களுக்கு	61

கல்விப் பயிற்சிக்குரிய கருவிகள் வாங்க	54
கட்டிடத்திற்கு வெள்ளையடித்தல் பழுது பார்த்தல் முதலியவற்றிற்கு	70
நூல்நிலையப் புத்தகங்கள்	2
சில்லறைச் செலவுகள்	7
மொத்தச் செலவு	8075

8 ஆசிரியர்களும் 294 பிள்ளைகளும் உள்ள இந்தப்பள்ளிக்கூடத்திற்கு, அரசாங்கத்தின் புதிய உத்திரவின்படி கிடைக்கக்கூடிய வருமானங்களின் விவரம்:—

ஆசிரிய ஊதிய உதவித்தொகை	ரூ.	3711
பஞ்சப்படி உதவித்தொகை	ரூ.	2446
நிர்வாக உதவித்தொகை (15 சத விகிதப்படி)	ரூ.	555
மொத்த வருமானம்	ரூ.	6712

மொத்தச் செலவு	ரூ.	8075
மொத்த வரவு	ரூ.	6712
ஆகவே அதிகப்படி செலவு	ரூ.	1363

மாணவர்களிடமிருந்து கட்டணம் ஏதும் வசூலிக்காமல், அரசாங்கத்தார் அளிக்கக்கூடிய 15 அல்லது 20 சத விகித நிர்வாக உதவித் தொகையை மட்டும் வைத்துக்கொண்டு பள்ளிக்கூடங்களை நடத்துவது முடியாத செயல் என்பதை இந்த இரண்டு உதாரணங்களும் தெள்ளத் தெளிவாக விளக்குகின்றன.

ஆகவே மாணவர்களிடமிருந்து கட்டணம் வாங்காமல் ஆரம்பப் பள்ளிக்கூடங்களைத் தொடர்ந்து நடத்தவேண்டுமானால், அதற்கு இருக்கிற ஒரே வழி, நிர்வாக உதவித் தொகையை, 15 அல்லது 20 சத விகிதம் என்னும் மிகக் குறைந்த அளவிலிருந்து, நியாயமாகத் தேவைப்படுகிற அளவுக்கு உயர்த்துவதுதான்.

பள்ளிக்கூடக் கட்டிட வாடகை முழுவதையும் அரசாங்கத்தார் அளித்துவிட்டு, அதனோடுகூட 30 சத விகித நிர்வாக உதவித் தொகையையும் தரவேண்டுமென்றும், அப்படித் தந்தால்தான் பள்ளிக்கூடங்களைத் தொடர்ந்து நடத்த இயலும் என்றும், சென்னை மாகில உதவி பெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் சங்கத்தார் ஏற்கெனவே

தீர்மானம் நிறைவேற்றி அரசாங்கத்திற்கு அனுப்பியிருக்கிறார்கள். அந்தத் தீர்மானத்தை ஆட்சியாளர்கள் ஏற்றுக்கொண்டால், இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடி எளிதில் தீர்ந்துவிடும்.

அரசாங்கத்தார் தருவதாகக் கூறுகிற 15 சத விகித நிர்வாக உதவித் தொகை, பள்ளிக்கூடக் கட்டிட வாடகையைச் செலுத்துவதற்குக் கூடப் பற்றாது என்பதை மேலே குறிப்பிட்ட இரண்டு உதாரணங்களும் அழுத்தந் திருத்தமாகத் தெரிவிக்கின்றன. முதலில் குறிப்பிடப்பட்ட பள்ளிக்கூடத்திற்கு, அரசாங்கத்தார் அளிக்கக்கூடிய நிர்வாக உதவித் தொகை 390 ரூபாய்தான் ஆனால் அந்தப் பள்ளியின் கட்டிடத்திற்காகச் செலுத்தப்பட்டு வருகிற வாடகையோ 540 ரூபாய். அதுபோலவே இரண்டாவதாகக் குறிப்பிடப்பட்ட பள்ளிக் கூடத்திற்குக் கிடைக்கக்கூடிய நிர்வாக உதவித் தொகை 555 ரூபாய். ஆனால் அந்தப் பள்ளிக்கூட நிர்வாகிகள் கட்டிவரும் வாடகைத் தொகையோ 764 ரூபாய். ஆகவே கட்டிட வாடகை முழுவதையும் அரசாங்கத்தாரே உதவித் தொகையாகத் தரவேண்டியது மிக மிக அவசியம் என்பதை யாரும் மறுக்க முடியாது. பள்ளிக்கூடத்தின் ஏனைய பல செலவுகளுக்காக 30 சத விகிதம் நிர்வாக உதவித் தொகையைத் தர வேண்டியதும் மிக மிக அவசியமாகும். தமிழ்நாட்டில் ஆரம்பக் கல்வியானது சீரும் சிறப்பும் மிகுந்த முறையில் வளரவேண்டுமானால் — ஆரம்பப் பள்ளிக்கூடங்கள் யாவும் உயர்ந்த தரத்திலும் ஒப்பற்ற வகையிலும் கல்விப் பயிற்சியை அளிக்க வேண்டுமானால், நிர்வாகிகள் சங்கத்தாரின் இந்தத் தீர்மானத்தை அப்படியே ஏற்றுக் கொள்ள வேண்டியது அரசாங்கத்தாரின் தனிப் பெருங் கடமையாகும்.

அரசாங்கத்தாரின் உதவித்தொகையை மட்டும் நம்பிப் பள்ளிக்கூடத்தை நடத்த முடியாது என்று கருதி எந்த நிர்வாகியாவது தன் பள்ளிக்கூடத்தை மூடிவிட்டால், அத்தகைய இடத்தில் வேறோர் புதிய பள்ளியைத் தொடங்கும் உரிமையை, வேறு தனியார் யாருக்காவது தருவோம் என்றும், தனியார் யாரும் முன்வராவிட்டால் நகரசபையினருக்கு அந்த உரிமை தரப்படும் என்றும் கல்வி அமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். நகராட்சி மன்றத்தினரோ அரசாங்கத்தினரோ ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்காத அந்தப் பழங்காலத்திலேயே—19ம் நூற்றாண்டின் இறுதியிலேயே, அஞ்சாத நெஞ்சத்தோடும் பொது நல உணர்ச்சியோடும் ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்கி, நாட்டின் முன்னேற்றத்திற்காக அரும்பணி ஆற்றிவந்திருக்கிற தனியார் பள்ளி நிர்வாகிகளுக்கு, ஆட்சியாளர்கள் காட்டுகிற நன்றி—அளிக்கிற மரியாதை—தருகிற கௌரவம், இந்தப் பதில்தானா என்று கேட்க விரும்புகிறேன். அது மட்டுமல்ல—

பள்ளிக்கூடங்களை நீண்ட காலமாக நிர்வாகம் செய்து, அந்தத் துறையில் இணையற்ற அனுபவமும் திறமையும் படைத்திருக்கிற இன்றைய நிர்வாகிகளாலேயே பள்ளிக்கூடங்களை நடத்த முடியா விட்டால், புதிதாகத் தோன்றுகிற அனுபவமற்ற தனியார் மட்டும் அந்தப் பள்ளிகளை எப்படி நடத்திவிட முடியும்? மலை போன்ற தோளும் எஃகு போன்ற உடல் உறுதியும் படைத்த ஒரு பயில்வானாலேயே தூக்க முடியாத பளுவை, புல் தடுக்கினால் கீழே விழத்தக்க நிலையில் உள்ள ஒரு நோஞ்சானால் மட்டும் எப்படித் தூக்க முடியும்?

நகராட்சி மன்றங்களிடம் இந்தப் பொறுப்பை ஒப்படைப்போம் என்று கூறுவதும் நியாயமற்ற வாதமே ஆகும். அப்படிச் செய்தால், அளிக்கப்படுகிற கல்வியின் தரம் நிச்சயம் குறைந்துபோகும். உதவி பெறும் தனியார் பள்ளிகளில் அளிக்கப்படுகிற கல்விப் பயிற்சியின் உயர்ந்த தரம் நகராட்சி மன்றப் பள்ளிகளில் இல்லை என்பது நாடறிந்த உண்மை. அது மட்டுமல்ல – நகராட்சி மன்றப் பள்ளிகளால் அரசாங்கத்துக்கு ஏற்படக்கூடிய செலவு, உதவி பெறும் பள்ளிகளுக்கு அவர்கள் இப்போது அளித்துவரும் உதவித் தொகையைவிடக் குறைந்தது இரண்டு மடங்கு அதிகமாக இருக்கும் என்பதில் துளியளவும் ஐயமில்லை. கல்வியின் தரம் குறைந்தாலும் கவலையில்லை—ஆகும் செலவு அதிகமானாலும் அக்கறையில்லை—தனியாரிடம் உள்ள பள்ளிகளைச் சித்திரவதை செய்துவிட்டு நகராட்சி மன்றங்களிடம்தான் அந்தப் பொறுப்பை ஒப்படைப்போம் என்று அரசாங்கத்தார் கூறுவதானால், அப்படிக் கூறவேண்டிய அளவுக்குத் தனியார் பள்ளிகள் இழைத்த பாவம்தான் என்ன என்று கேட்க ஆசைப்படுகிறேன்.

உதவிபெறும் ஆரம்பப் பள்ளிக்கூடங்களை, அவற்றின் நிர்வாகிகள், இலாப வேட்டைக்கான வாணிப நிலையங்களாகக் கருதுகிறார்களே தவிரப் பொதுநல உணர்ச்சியோடு பணியாற்றவில்லை என்று சில சமயங்களில் அமைச்சர்கள் பேசுகிறார்களாம். உண்மைக்கும் நியாயத்திற்கும் நேர் மாறான கூற்று இதைவிட வேறு ஒன்று இருக்க முடியாது. எத்தனையோ முறை சிந்தித்துப் பார்த்துவிட்டேன். ஓர் ஆரம்பப் பள்ளிக்கூடத்திலிருந்து அளவுக்கு மீறிய இலாபத்தை எப்படிச் சம்பாதிக்க முடியும் என்பதை என்னால் புரிந்துகொள்ளவே முடியவில்லை. சில பள்ளிகூடங்களில் நிர்வாகிகளுக்கு, செலவை விட வரவு சற்று அதிகமாக இருக்கக்கூடும். அப்படியிருக்கிற சிறிதளவு தொகையைக் கொண்டு அவர்கள் தங்களுடைய குடும்பங்களை நடத்திக் கொண்டிருக்கலாம். அதிலே தவறு என்ன இருக்க முடியும்? இரவு பகலாகப் பள்ளிக்கூடத்தைக் கட்டிக் காத்து, அதற்காகவே தன் நேரம் முழுவதையும், நினைப்பு முழுவதையும்,

ஆற்றல் முழுவதையும் செலவிடும் ஒரு நிர்வாகிக்கு, அவருடைய குடும்பச்செலவுக்குத் தேவையான பணம்கூட அந்தப்பள்ளியிலிருந்து கிடைக்கவில்லையென்றால், அவருடைய குடும்பப் படகை வாழ்க்கைக் கடலில் ஓட்டிச் செல்வது எப்படி? முழுநேரப் பணி புரிந்துவிட்டு, குடும்பச் செலவுக்குத் தேவை யான மிகச் சிறிய வருமானத்தை மட்டுமே பெறுகிற பள்ளிக்கூட நிர்வாகிகளை வியாபார மனப்பான்மை உள்ளவர்கள் என்றுகூறுவது சிறிதளவும் பொருந்தாது.

சென்னை மாநிலத்தில் மொத்தம் 21,703 ஆரம்பப் பள்ளிகள் உள்ளன என்றும், இவற்றில் 7676 பள்ளிகள்தான் உதவிபெறும் தனியார் பள்ளிகள் என்றும், இந்த 7676 பள்ளிகளில் 1033 பள்ளிகள் மட்டுமே கட்டணம் வசூலிக்கும் பள்ளிகள் என்றும், அவற்றில் கூட 740 பள்ளிகள் கட்டணம் வசூலிக்காத பள்ளிகளாக மாறிவிட ஒப்புக்கொண்டுவிட்டன என்றும், ஆகவே இப்போது ஏற்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிற நெருக்கடி, மொத்தமுள்ள 21703 பள்ளிகளில் கேவலம் 293 பள்ளிகளைத்தான் பாதிக்கின்றன என்றும், இந்த நிலையில் இதனை எப்படி மிகப் பெரிய நெருக்கடியாகக் கூற முடியும் என்றும், கல்வி அமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் கேட்டிருக்கிறார்கள். இப்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியை மிகச் சிறியதாகத் தோன்றும்படிச் செய்ய அமைச்சர் அவர்கள் இப்படியெல்லாம் பேசியிருப்பது மிகவும் வருந்தத்தக்கதாகும். அரசாங்கத்தின் புதிய உத்தரவால் பாதிக்கப்படுபவை உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளில் கட்டணம் வசூலிக்கும் பள்ளிகள் மட்டுமே! இந்த நிலையில் அந்தப் பள்ளிகளைப்பற்றி மட்டும்தான் பேசவேண்டுமே தவிர, இந்தப் பிரச்சினைக்கே சம்பந்தமில்லாத ஏனைய பள்ளிகளைப்பற்றியெல்லாம் பேசிக் குழப்பத்தை உண்டாக்குவது சிறிதும் நியாயம் ஆகாது. அமைச்சரின் புள்ளி விவரப்படி, கட்டணம் வசூலிக்கும் உதவிபெறும் ஆரம்பப்பள்ளிகள் மொத்தம் 1033 இருக்கின்றன. அந்த 1033 பள்ளிகள் அத்தனையையும்தான் இந்தப் பிரச்சினை பாதிக்கிறது. ஆகவே பிரச்சினை மிகப் பெரிய ஒன்றே தவிர மிகச் சிறிய ஒன்று அன்று என்பது வெள்ளிடை மலை.

இப்படிப்பட்ட பல்வேறு சிக்கல்கள் நிரம்பிய ஒரு பிரச்சினையை அரசாங்கத்தார் இவ்வளவு அவசர அவசரமாகத் தீர்த்துக் கட்டப் பார்ப்பதையும் நாம் வன்மையாகக் கண்டிக்கக் கடமைப்பட்டிருக்கிறோம். ஆரம்பப் பள்ளிகளின் எதிர்கால வாழ்வையே பாதிக்கக்கூடிய ஒரு மாபெரும் பிரச்சினையை—நிர்வாகிகள், பெற்றோர்கள், ஆசிரியர்கள், சட்ட மன்றத்தினர், கல்வித்துறை வல்லுநர்கள் ஆகிய அனைவரையும் கலந்து ஆலோசித்து முடிவெடுக்கவேண்டிய ஒரு பிரச்சினையை அரசாங்கத்தார் ஒரே ஒரு உத்தரவின்மூலம் முடித்து

விட எண்ணுவது முறையற்ற செயலே ஆகும். சென்ற நவம்பரில் கொண்டுவந்த ஓர் உத்தரவை இந்த ஜூன் மாதத்தில் நடைமுறைக்குக் கொண்டுவருவது நியாயமாகாது. அவசரமின்றி ஆராய்ந்து பார்க்கவேண்டிய பெரும் பிரச்சினை இது. எனவே இந்த உத்தரவின் அமுலை, குறைந்தது ஓராண்டுகாலம் தள்ளிப்போட வேண்டியது அவசியத்திலும் அவசியமாகும். அப்படிச் செய்தால்தான், இந்தப் பிரச்சினையில் தொடர்புடைய அனைவரும், அமைதியாக இருந்து எண்ணிப் பார்த்து, நிதானமான முறையில் முடிவுகள் செய்து, நியாயமான வகையில் பள்ளிகளை நடத்த வழி வகுக்க முடியும்.

சென்னை மாநில உதவி பெறும் பள்ளி நிர்வாகிகளின் சார்பாக நான் எடுத்துக்காட்டியுள்ள இந்தப் பிரச்சினைகளை யெல்லாம் ஆட்சியாளர்கள் அலசி ஆராய்ந்து பார்த்து, தங்கள் உத்தரவை நியாயமான முறையில் திருத்தியமைக்கவேண்டும் என்று அவர்களை அன்போடும் பணிவோடும் கேட்டுக்கொள்ளுகிறேன்.

வருக ; வருக ; உங்கள் வரவு நல்வரவு ஆகுக என்று மீண்டும் ஒருமுறை உங்கள் அனைவரையும் மனமார வரவேற்கிறேன்.

வணக்கம்.

அறிவுக் கதிர்

எந்த அரசாங்கமானாலும் சரி, அதன் செயல் ஒவ்வொன்றையும், அதன் மக்கள் தைரியமாக அலசி ஆராயவேண்டும். அப்படி ஆராய்வதை அரசாங்கத்தார், பொறுத்துக்கொள்வது மட்டுமல்ல, போற்றி வளர்க்கவும் வேண்டும்.

—வில்லியம். ஹாரிசன்

தூரத்தை ஊடுருவிக்கொண்டு குண்டுகள் பாய்கின்றன. அப்படித்தான், காலத்தை ஊடுருவிக்கொண்டு சொற்கள் பாய்கின்றன. சொற்களின் ஆற்றல் உண்மையிலேயே மகத்தானது.

—ஜோசப் கொன்ராட்

சென்னை மாநில
உதவிபெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் மாநாடு

மாநாட்டுத் திறப்பாளர்
திருவாளர் டாக்டர் ஏ. சிதம்பரநாதன் செட்டியார்
அவர்களின்
விரிவுரை

இங்குக் குழுமியுள்ள உதவிபெறும் பள்ளி நிர்வாகிகளுக்கும் பொதுமக்களுக்கும் முதற்கண் என் அன்பினைத் தெரிவித்துக் கொள்கிறேன். உங்களையெல்லாம் நேரில் சந்தித்து அளவளாவும் ஒரு வாய்ப்பினை எனக்கு அளித்ததற்காக இம் மாநாட்டின் செயலாளர்களுக்கு என் நன்றி உரியது ஆகுக. எனக்கு முன்னால் வரவேற்புரை ஆற்றிய திரு. சேஷாசலம் அவர்கள், தன்னுடைய விரிவுரையை மிகவும் நல்ல முறையில் நிகழ்த்தியிருக்கிறார். நிர்வாகிகளுக்கு உள்ள குறைகளைப் பற்றி அவர் விரிவாகவும் தெளிவாகவும் விளக்கியிருக்கிறார்.

உதவிபெறும் பள்ளிகளை நடத்தி வரும் நிர்வாகிகளுக்கு அரசாங்கமும் பொதுமக்களும் நன்றி செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறார்கள். அரசாங்கத்தாரும், உள்ளாட்சி மன்றங்களும் ஆரம்பப் பள்ளிகளைத் தொடங்க முடியாத ஒரு காலத்தில்— தொடங்குவதற்குத் தேவையான வசதிகளைப் பெற்றிராத ஒரு காலத்தில்—தொடங்க விரும்பாத ஒரு காலத்தில் என்று கூட இயம்பலாம்—அத்தகைய காலத்திலேயே பள்ளிகளைத் தொடங்கி ஆரம்பக் கல்வியை வளர்க்க முன் வந்தவர்கள் தனியார் நிர்வாகிகளாகிய நீங்கள். இத்தகைய அரும்பணி ஆற்றியுள்ள உங்களைப் பாராட்ட வேண்டிய கடமை அரசாங்கத்துக்கும் பொது மக்களுக்கும் உண்டு. பொது மக்களில் ஒருவன் என்கிற முறையில் நானும் என் பாராட்டை—நன்றியை உங்களுக்குத் தெரிவித்துக் கொள்கிறேன். சிறப்பாகவும் குறிப்பாகவும் கிறித்தவ நிலையங்கள் இந்தத் துறையில் ஆற்றியுள்ள பணியை நாம் என்றும் மறத்தல் இயலாது. தங்கள் சமயத்தைப் பரப்பும் நோக்கத்துடன்தான் அவர்கள் கல்வித் துறையில் ஈடுபட்டார்களே தவிரக் கல்வியைப் பரப்பும் எண்ணத்துடன் அல்ல என்று சிலர் கூறுகிறார்கள். நோக்கம் எதுவாயிருந்தாலும் சரி கிறித்தவ நிலையத்தார்கள் இந்த நாட்டில் கல்வியைப் பரப்பியிருக்கிறார்கள் என்பது மறுக்க முடியாத உண்மை. கிறித்தவ நிலையத்தினரும் சரி, வேறு சில

ரும் சரி, சமயப் பிரசாரத்திற்காக அல்லது அன்ன சத்திரம் அமைப்பதற்காக அல்லது இன்னபிற அறச் செயல்களுக்காக வைத்திருந்த பணத்தைக் கல்விக் கோயிலுக்காகச் செலவிட்டிருக்கிறார்கள். இந்தப் பெரு நோக்கத்தை நாம் பாராட்டாமல் இருக்க முடியாது.

எல்லோருமே இப்படிக் கல்வியைப் பரப்புவது ஓர் அறம் என்ற எண்ணத்தில் பள்ளியைத் தொடங்கினார்கள் என்று கூற முடியாது. சிலர், கடை முதலிய வியாபாரங்களைத் தொடங்குவதற்குப் பதிலாகத் தங்கள் செல்வத்தைப் பள்ளியில் போட்டுப் பார்க்கலாமே என்று கருதியிருந்தால் அதனைத் தவறு என்று கூறமுடியாது. நான் கூட இராவ்பகதூர் எஸ். அப்பு சாஸ்திரி அவர்கள் நடத்தி வந்த தனியார் பள்ளியில்தான் பயின்றேன். அவர் தன் பள்ளியை மிகக் கடுமையான முறையில் --ஆனால் மிக நியாயமான வகையில் நடத்தி வந்தார். அவர் பி. ஏ., எல். டி. பயின்றவர். ஆகவே எளிதில் அவர் ஆசிரியர் தொழிலுக்குச் சென்றிருக்கலாம். வேறு தொழில் எதற்காவது போயிருக்கலாம். ஆனால் அவர் அப்படியெல்லாம் செய்யாமல், அப்படிச் செய்வதால் கிடைக்கக்கூடிய வருமானத்தை விட்டுவிட்டு ஒரு பள்ளிக்கூடத்தைத் தொடங்கி நடத்தினார். அவர் போலவே வேறு பலரும் தங்கள் வருவாய்க்குரிய ஒரு சிறிய வழியாகப் பள்ளிக்கூடங்களை நடத்தியிருக்கலாம். அப்படி நடத்தியது ஒரு பழியா பாவமா தவறா என்று கேட்க விரும்புகிறேன்.

இருபது ஆண்டுகளுக்கு முன்னர் தனியார் நிர்வாகிகளை யாரும் பழிக்கவில்லை. பத்தாண்டுகளுக்கு முன்கூட எவரும் பழித்தாரில்லை. தாமே முன் வந்து பள்ளிகளைத் தொடங்கி நடத்தும் நல்லாரும் உள்ளனரே என்றுதான் மகிழ்ந்து பாராட்டினர். ஏனென்றால் அப்போதெல்லாம் அரசாங்கமே ஆரம்பப் பள்ளிகள் யாவற்றையும் தொடங்கி நடத்த முடியும் என்கிற நிலை இல்லை. ஆனால் இப்போது அத்தகைய நம்பிக்கை அரசாங்கத்திற்கு ஏற்பட்டுவிட்டது. தனியார் நிர்வாகிகளைப் பழித்துப் பேசும் போக்கும் இப்போதுதான் ஏற்பட்டுள்ளது.

சென்ற நவம்பர் மாதத்தில் அரசாங்கத்தார் பிறப்பித்துள்ள ஓர் உத்தரவின் காரணமாக உங்களிடையே ஒரு நெருக்கடி உருவாகியிருக்கிறது. மொத்தமுள்ள 20,000 ஆரம்பப் பள்ளிகளில் ஏறத்தாழ 7000 பள்ளிகளே உதவி பெறும் பள்ளிகள் என்றும் அவற்றிலும் கிட்டத்தட்ட 1000 பள்ளிகளே கட்டணம் வசூலிக்கும் பள்ளிகள் என்றும் கல்வியமைச்சர் அவர்கள் தெரிவித்திருக்கிறார்கள். இந்த 1000 பள்ளிகளிலும் கிட்டத்தட்ட 700 பள்ளிகள் கட்டணம் வாங்காத பள்ளிகளாக இருக்க ஒப்புக்கொண்டு விட்டன என்று

அமைச்சர் இயம்பியிருக்கிறார். ஆகவே மிச்சமுள்ள 300 பள்ளிகளைத்தான் இந்தப் பிரச்சினை பாதிக்கிறது என்று கருதுகிறேன். சென்னை, கோவை, திருச்சி, மதுரை, சேலம் போன்ற பெரிய நகரங்களில் உள்ள பள்ளிகளைத்தான் இந்தச் சிக்கல் கடுமையாகப் பாதிக்கிறது. கிராமங்களில் உள்ள பள்ளிகளை இந்தச் சிக்கல் பாதிக்கவில்லை என்றே சொல்லிவிடலாம். இந்தப் பிரச்சினை நகரங்களில் கடுமையாக இருப்பதற்கு வாடகையே முக்கிய காரணம். இங்கெல்லாம் கொடுக்கவேண்டிய வாடகையைவிட கொடுக்கப்படுகிற வாடகை அதிகமாகவே உள்ளது. எந்தெந்தப் பள்ளிகள், தங்கள் கணக்கைக் காட்டி, வாடகை கொடுக்கமுடியாத நிலையில் இருப்பதைத் தெளிவுபடுத்துகின்றனவோ அந்தப் பள்ளிகளுக்கெல்லாம், வாடகை முழுவதையும் அரசினரே தரவேண்டும் என்பது என் கருத்து. முடியுமானால், உதவிபெறும் பள்ளிகள் அத்தனைக்குமே, அவர்களுடைய வாடகை ரசீதை முன் வைத்து வாடகையை உதவித் தொகையாக அரசினர் தருவது நல்லது. சென்னை நகரத்தில் உள்ள தனியார் பள்ளிகளுக்கு மட்டுமல்ல. ஏனைய முனிசிபல் நகரங்களில் உள்ள பள்ளிகளுக்கும் வாடகைத் தொகை கொடுக்கப்படவேண்டும்.

இப்போது ஏற்பட்டுள்ள சிக்கல், அரசாங்கத்தாருக்கும் நிர்வாகிகளுக்கும் மட்டும் தொடர்புள்ள சிக்கல் என்று நான் கருதவில்லை. இந்தச் சிக்கலைத் தீர்க்க வேண்டிய பொறுப்பில் பொது மக்களுக்கும் பங்கு உண்டு என்று நான் கருதுகிறேன். கிராமப் பகுதிகளில் உள்ள பள்ளிகளின் வளர்ச்சிக்காக School Development Plan-Pilot Project என்று ஏதேதோ திட்டங்கள் உருவாகியுள்ளன அல்லவா? இந்தத் திட்டங்களெல்லாம் சென்னையையும் பிற நகரங்களையும் ஏன் புறக்கணிக்கின்றனவோ தெரியவில்லை. கிராமங்களில் பள்ளிகளின் வளர்ச்சிக்காகப் பணம் குவிகிறது என்று கூறுகிறார்கள். பள்ளிக் கட்டிடத்திற்குக் கூரை இல்லை. என்றால் கூரை அமைக்க மூங்கிலும் செங்கல்லும் பிறவும் திரண்டு வருகின்றன; குடிப்பதற்கு டம்ளர் இல்லையென்றால் அண்டாவே கிடைக்கிறது என்று தெரிகிறது. கிராமங்களில் அப்படி நடக்குமானால், நகரங்களில், நீங்கள், உங்கள் பள்ளிகளின் வளர்ச்சிக்காக ஏன் அப்படிப் பொது மக்களை நாடக்கூடாது? நீங்களும் ஏன் மக்களிடம் உங்கள் பள்ளி வளர்ச்சிக்காக நன்கொடை திரட்டக்கூடாது? சுண்ணம்பு அடித்தல், பழுது பார்த்தல் போன்ற செலவுகளை ஏற்பதும்படி செய்ய வசதி படைத்த பொது மக்களிற் சிலரை நீங்கள் ஏன் நாடுதல் ஆகாது? அரசாங்கத்தின் உதவியை மட்டுமே நம்பியிராமல் பொது மக்களின் உதவியையும் தேடித் திரட்ட நீங்கள் தயாராகவேண்டும் என்பது என் பணிவான கருத்து.

(32-ம்பக்கம் பார்க்க)

மாநில மாநாடு - மட்டற்ற ஆர்வம்

சென்னை வழங்கிய சிறந்த காட்சி

தமிழகம் எங்கணுமிருந்து திரண்டனர் நிர்வாகிகள்.

உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளின் உதவித் தொகை பற்றி அரசாங்கத்தார் வெளியிட்டுள்ள உத்தரவை ஆராய்வதற்காக, சென்னை மாநில உதவிபெறும் ஆரம்பப் பள்ளி நிர்வாகிகள் மாநாடு, சென்னை நகரில், கோகலே மண்டபத்தில், 25-4-59 சனிக் கிழமை காலை 9 மணி அளவில் தொடங்கியது. மாநாடு தொடங்கு வதற்கு இரண்டோர் நாட்கள் முன்னதாகத்தான் மாநாட்டின் அழைப்புத் தாள் வெளியூர்களில் உள்ள நிர்வாகிகளுக்குக் கிடைத் திருக்கிறது. மாநாடு திடீரென்று ஏற்பாடு செய்யப்பட்ட காரணத் தால் வெளியூர் நிர்வாகிகளுக்குப் போதுமான முன் அறிவிப்புத் தர இயலவில்லை. என்றாலும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலிருந் தும் உதவி பெறும் பள்ளி நிர்வாகிகள், திரள் திரளாக வந்திருந்த காட்சி, பள்ளிகளின் வளர்ச்சியில் அவர்களுக்கு உள்ள மட்டற்ற ஆர்வத்தை விளக்கும் சிறந்ததோர் சாட்சியாக அமைந்தது.

முதலில், சென்னை மாநில உதவி பெறும் பள்ளி நிர்வாகிகள் சங்கத்தின் பொதுச் செயலாளரும், மாநாட்டின் வரவேற்புத் தலை வரும் ஆகிய திருவாளர். ஏ. ஆர். சேஷாசலம் அவர்கள் தம் முடைய இனிய அரிய வரவேற்புரையை நிகழ்த்தினர். அதற்கு அடுத்தபடியாகத் திருவாளர் டாக்டர் ஏ. சிதம்பரநாதன் செட்டி யார் எம். ஏ., பி. எச்டி., எம். எல். சி. அவர்கள், தமக்கே உரிய பாணியில், இனிமையும் எழிலும் ததும்பிடும் முறையில் அழகிய தோர் சொற்பொழிவாற்றி மாநாட்டைத் திறந்துவைத்தார். திறப்பு விழாச் சொற்பொழிவு முடிவுற்றதும், முன்னாள் மாவட்ட நீதிபதி திருவாளர் கே. எஸ். இராமசாமி சாஸ்திரி, பி. ஏ., பி. எல். அவர்கள், மாநாட்டின் தலைமைப் பொறுப்பை ஏற்று, மிக விரிவான முறையில், ஆரம்பப் பள்ளிகளுக்கு ஏற்பட்டுள்ள நெருக்கடியின் தன் மையையும், அந்த நெருக்கடியை விரட்டியடிக்க ஆட்சியாளர்கள் மேற்கொள்ளவேண்டிய திட்டங்களின் அவசியத்தையும் விளக்கிக் காட்டித் தலைமை முன்னுரையை நிகழ்த்தினர். திரு. ஏ. கே. எஸ். சர்மா அவர்களின் நன்றியுரையுடன், காலை நிகழ்ச்சி முடிவுற்றது.

பிற்பகல் 2 மணிக்குத் தீர்மான ஆய்வுக் குழுவின் கூட்டம் (Subjects' Committee Meeting) கூடி 5 மணி வரையில் பிரதிநிதிகள் கொண்டுவந்த பல்வேறு தீர்மானங்களை அலசி ஆராய்ந்து, மாநாட்டில் நிறைவேற்ற வேண்டிய தீர்மானங்களைப்பற்றி, ஒரு முடிவுக்கு வந்தது.

பிற்பகல் 5 மணிக்கு மாநாடு மீண்டும் கூடியதும், பாராளுமன்ற முன்னாள் உறுப்பினர் திரு. எ. எம். இரத்தினசாமி, சென்னை நகராட்சி மன்ற உறுப்பினர் திரு. பி. எஸ். செட்டியார், சென்னைப் பச்சையப்பன் கல்லூரி விரிவுரையாளர் திரு. மா. இளஞ்செழியன் எம். ஏ., தமிழ்நாடு பெற்றோர்களின் மத்திய சங்கச் செயலாளர் திரு. எல். எஸ். மணி, திரு. எ. கே. எஸ். சர்மா ஆகியோர், நாட்டின் கல்வி வளர்ச்சிக்காக உதவிபெறும் பள்ளிகள் ஆற்றியுள்ள அரும் பெரும் பணிகளின் சிறப்பை விளக்கியும், அந்தப் பள்ளிகளின் வளர்ச்சிக்காக அரசாங்கத்தார் பல்லாற்றானும் துணை புரிய வேண்டியதன் அவசியத்தை எடுத்துக்காட்டியும், கட்டணம் வாங்காத உதவி பெறும் பள்ளிகளுக்கு அரசாங்கத்தார், கட்டிட வாடகை முழுவதையும் கொடுப்பதோடு 30 சத விகிதம் நிர்வாக உதவித் தொகையையும் தந்தாக வேண்டியது எவ்வளவு நியாயம் என்பதை நிலைநாட்டியும் விரிவுரை ஆற்றினர்.

மாநாட்டில் ஆறு அரிய தீர்மானங்கள் ஏகமனதாக நிறைவேற்றப்பட்டன.

மாநாட்டின் தலைவர் அவர்கள், தம்முடைய முடிவுரையில், தீர்மானங்கள் முற்றிலும் நியாயமானவை என்பதை மிக அரிய முறையில் விளக்கிக் காட்டினார்கள்.

திரு. எ. ஆர். சேஷாசலம் அவர்கள் மாநாட்டில் கலந்து கொண்ட அனைவருக்கும் நன்றி நவின்ற பிறகு இரவு 9 மணி அளவில் மாநாடு இனிது முடிவுற்றது.

சென்னை மாநில

உதவி பெறும் ஆரம்பப் பள்ளி

நிர்வாகிகள் மகாநாடு

25—4—59

நிறைவேறிய தீர்மானங்கள்

---

1. உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளைக் கட்டணம் வசூலிக்கும் ஆரம்பப் பள்ளிகள், கட்டணம் வசூலிக்காத ஆரம்பப் பள்ளிகள் என்று பாகுபடுத்தி அது பற்றி ஆட்சியாளர்கள் பிறப்பித்துள்ள உத்தரவை 1960-61ம் ஆண்டுக்கு ஒத்திவைக்க வேண்டுமென்றும், அதுவரையில் தற்போது உள்ள உதவித் தொகைத் திட்டமே தொடர்ந்து நடைமுறையில் இருக்க வேண்டுமென்றும் இந்த மாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக் கொள்கிறது.

2. கட்டணம் வசூலிக்காத உதவிபெறும் பள்ளிகளுக்கு அரசாங்கத்தார் தரக்கூடிய நிர்வாக உதவித் தொகை, ஆசிரிய ஊதிய உதவித் தொகையில் 30 சத விகிதம் இருக்க வேண்டும் என்றும், அது மாதந்தோறும் அளிக்கப்பட வேண்டும் என்றும் இந்த மாநாடு கேட்டுக்கொள்கிறது.

3. உதவி பெறும் பள்ளிகள், வாடகைக் கட்டிடத்தில் இருந்தால் அந்தக் கட்டிட வாடகை முழுவதையும், சொந்தக் கட்டிடத்தில் இருந்தால் அந்தக் கட்டிடத்திற்குக் கிடைக்கக்கூடிய நியாயமான வாடகையையும் அரசாங்கத்தார் உதவித் தொகையாக மாதந்தோறும் அளிக்க வேண்டும் என்று இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது.

4. வாடகையையும் 30 சத விகித நிர்வாக உதவித் தொகையையும் அரசாங்கத்தார் கொடுக்கவில்லையானால், அவற்றிற்குப் பதிலாக (as an alternative) 1, 2, 3, 4, 5 ஆகிய வகுப்புகளில் உள்ள ஒவ்வொரு பிள்ளைக்கும் முறையே அணா 8, 10, 12, 14, ரூ. 1 என்கிற விகிதப்படி அரசாங்கத்தார் (கட்டணம் வசூலிப்பதை இழப்பதால் ஏற்படும் நஷ்டத்தை ஈடு செய்ய) நஷ்ட ஈடு அளிக்க வேண்டுமென்று இந்த மாநாடு கேட்டுக் கொள்கிறது.

5. ஆசிரியர்களின் ஊதியத் தொகையை அரசாங்கத்தார் அவர்களுக்கே நேரடியாக பட்டுவாடாச் செய்தால் கட்டுப்பாடு குறைந்து திறமையின்மை அதிகரித்துவிடும். ஆதலால் அந்தத் தொகையை நேரடியாகப் பட்டுவாடாச் செய்ய ஏற்பாடு செய்ய வேண்டுமென்று இந்த மாநாடு அரசாங்கத்தைக் கேட்டுக் கொள்கிறது.

6. வாடகை உதவித் தொகை, நிர்வாக உதவித் தொகை ஆகியவற்றிலிருந்து செலவு போக மீதி எதுவும் இருக்காது. ஆதலால், நிர்வாகிகளின் முழு நேர உழைப்புக்காக மாதம் ரூபாய் 100 கௌரவத் தொகையாக (Honorarium) அளிக்க வேண்டுமென்று இந்த மாநாடு கேட்டுக்கொள்கிறது.

(28-ம் பக்கத் தொடர்ச்சி)

மற்றுமோர் இன்றியமையாத கருத்தையும் நான் தெரிவிக்க விழைகிறேன். எந்தெந்தப் பள்ளிக்கூட நிர்வாகி பள்ளியின் நிர்வாகப் பொறுப்பையே தன் முழு நேர ஊழியமாகக் கொண்டிருக்கிறாரோ அவருக்கெல்லாம் மாதந்தோறும் அரசாங்கத்தால் கௌரவ ஊதியம் (Honorarium) தரப்படவேண்டும். பள்ளிக்கூடத் தலைமையாசிரியர் பெறுகின்ற ஊதியத்திற்கு மேற்படாத ஒரு தொகையை இத்தகைய கௌரவ ஊதியமாகத் தரவேண்டும். இது, அரசாங்கத்தார் சிந்திக்கவேண்டிய ஒரு செய்தி நாம் சிந்தித்துக் கொண்டுதான் இருக்கிறோம. நாம் சிந்திப்பதால் என்ன பயன்? அரசாங்கம் அல்லவா சிந்தித்தல் வேண்டும்? அவர்கள் சிந்தித்தால் அல்லவா பண உதவி கிடைக்கும்? ஆசிரிய ஊதிய உதவித் தொகை, நிர்வாக உதவித் தொகை ஆகிய இவற்றோடு இந்தக் கௌரவ ஊதிய உதவித் தொகையையும் அரசாங்கத்தார் சேர்த்துத் தரவேண்டும.

தனியார் பள்ளிகளின் கட்டிட வாடகை முழுவதையும் அரசாங்கத்தார் தரவேண்டியது மிக மிக அவசியம் என்பதை மீண்டும் ஓர் முறை வற்புறுத்திக் கூறி, இந்த மாநாட்டைத் தொடங்கி வைக்கிறேன்.

சென்னை மாநில
உதவி பெறும் ஆரம்பப் பள்ளி
நிர்வாகிகள் மாநாடு

25—4—59

முன்னாள் மாவட்ட நீதிபதி
திருவாளர் கே. எஸ். இராமசாமி சாஸ்திரி,
பி. ஏ., பி. எல்., அவர்கள்
நிகழ்த்திய

தலைமையுரை

அன்பிற் சிறந்த நிர்வாகிகளே,

வணக்கம் பல. இந்த மாநாட்டிற்குத் தலைமை தாங்கும் பொறுப்பை எனக்கு அளித்த மாநாட்டு நிர்வாகிகளுக்கு முதலில் என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். நம்முடைய தாய்நாட்டின் எதிர்காலம் பெருமையும் சிறப்பும் பொருந்தியதாக இருக்க வேண்டுமானல் மிக விரைவில் இந்த நாட்டில் உள்ள அத்தனைப் பேரும் படிப்பறிவு உள்ளவர்களாக மாறவேண்டும் என்பதையும், நவீன விஞ்ஞான அறிவில் நம் நாடு தலைசிறந்த தேர்ச்சி பெறவேண்டும் என்பதையும், நம் தாயகத்துப் பண்பாட்டை நாம் மறவாமல் போற்றவேண்டும் என்பதையும் பொதுமக்கள் நன்ருக அறிந்திருக்கிருர்கள். தற்போதைய இந்திய அரசியல் திட்டம் 26-1-1950ல் நடைமுறைக்கு வந்தது. அந்தத் திட்டத்தின் 45வது விதி, (Article 45) *"அரசியல் திட்டம் நடைமுறைக்கு வந்த பத்தாண்டுகள் முடிவதற்குள், 14 வயது வரை உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் கட்டாய இலவசக் கல்வியை அளிக்க அரசு பாடுபடவேண்டும்" என்று தெரிவிக்கிறது. வயது வந்த எல்லோருக்கும் 26-1-50 முதல் வாக்குரிமை அளிக்கப்பட்டபடியால் இந்தக் கட்டாய இலவசக் கல்விக் கொள்கையானது மேலும் பல மடங்கு அவசரம் மிகுந்த அவசியம் ஆகிவிட்டது. எல்லா மக்களுக்கும் கல்வியறிவும் அரசியல் அறிவு முதிர்ச்சியும் ஏற்படாத நிலையில், எல்லோருக்கும் வாக்குரிமை கிடைத்தால், அதனல் சிறந்த பயன் விளைய முடியாது. ஆனல் 45வது விதியில் தெரிவிக்கப்பட்டுள்ளதைப் போல 26-1-1960க்*

குள் எல்லாப் பிள்ளைகளுக்கும் ஆரம்பக் கல்வியை அளிப்பது இயலாது என்றே தோன்றுகிறது. அந்த நாளுக்குப் பிறகாவது, எவ்வளவு விரைவில் முடியுமோ அவ்வளவு விரைவில் அந்த இலட்சியத்தை அடைய நாம் முயற்சி செய்யவேண்டும். கல்வித் துறைபற்றி ஆராயப்படுகிற எந்த மாறுதலையும் திட்டத்தையும், அந்த இலட்சியத்தை அடைவதற்கு அது எவ்வளவு தூரம் பயன்படும் என்பதை முன் வைத்துத்தான் நாம் எண்ணிப் பார்க்கவேண்டும்.

ஒரு ஜனநாயக நாட்டில், பாதுகாப்பும் கல்வியுமே மிக மிக முதன்மையானவை என்பதும், நாட்டின் வருமானத்திலிருந்து முதலில் இந்த இரு துறைகளுக்கான செலவையும் மேற்கொண்டான பிறகே ஏனைய துறைகளைக் கவனித்தல் வேண்டும் என்பதும் அனைவரும் ஒப்புக்கொள்ளும் உண்மைகளாகும். அரசாங்கம் அறிவிக்கிற எல்லாத் திட்டங்களையும் கூர்ந்து கவனித்துப் பார்த்து, அலசி ஆராய்ந்து, நியாயமான முடிவுகளை உருவாக்கி, அந்த முடிவுகளை அரசாங்கத்திற்கு அறிவிக்கவேண்டியது பொது மக்களின் கடமையாகும். மக்கள் தங்களுடைய கருத்துக்களை அச்சம் தயை தாட்சண்யமின்றித் தெரிவிக்கத் துணிந்தால்தான் ஜனநாயகக் கோட்பாடு வெற்றி பெற முடியும். எந்த அரசாங்கம் மக்களின் மனக் கருத்தை அறிந்து அதற்கு ஏற்ற வகையில் நடக்க மறுக்கிறதோ அந்த அரசாங்கம், ஜனநாயகப் பாதையிலிருந்து வழுவி எதேச்சாதிகாரப் பாதையை அடைந்துவிட்டது என்றே பொருள்.

இந்தியாவில் ஆரம்பக் கல்வியின் வளர்ச்சியானது, பிரிட்டிஷ் ஆட்சியானது விட்டுச் சென்ற சில கொள்கை—கோட்பாடு—நடைமுறைகளாலும், இன்றைய ஆட்சியாளர்கள் அவசர அவசரமாக நிகழ்த்தி வருகின்ற சில சோதனைகளாலும் பெரிதும் தடைப்பட்டிருக்கிறது. இத்தகைய நிலையில் மக்கள் தங்களுடைய உள்ளக் கருத்துக்களை அச்சமின்றி அறிவிக்கவேண்டியது மிகவும் அவசியமாகிவிட்டது.

சென்னை அரசாங்கம் 1955ல் வெளியிட்ட வெள்ளை அறிக்கையானது, அதனுடைய 30வது பத்தியில், "இந்த மாநிலத்தின் ஆரம்பக் கல்வியை வளர்ப்பதில் உள்ளாட்சி மன்றங்களும் தனியார் துறையினரும் முக்கியமான அளவு பணியாற்றியுள்ளனர்" என்று தெரிவித்திருக்கிறது. ஆகவே இப்போதும் சரி, இனி வருங்காலத்திலும் சரி, இந்த மாநிலத்தில் ஆரம்பக் கல்வியைப் பரப்புவதில் உதவி பெறும் ஆரம்பப் பள்ளிகளின் பங்கு மிகச் சிறந்த ஒன்றாகும். என்றாலும் அதே வெள்ளை அறிக்கையின் 40—41வது பத்திகள், "உதவி பெறும் பள்ளிகள் இலாபத்திற்காக நடத்தப்படுகின்றன" என்றும், "பள்ளிக்கூடங்களின் வளர்ச்சிக்காக நிர்வாகிகள் ஆண்டு

தோறும் அளிக்கின்ற உதவித் தொகை (recurring contribution) மிகச் சிறிய அளவினதாக இருக்கின்றது'' என்றும் தெரிவித்திருக்கிறது. ஆனால் நான் குறிப்பிட விரும்புகிறேன்—அத்தகைய பள்ளிகளின் தரத்தை உயர்த்தவேண்டியது அவசியம்தான். ஆனால் அதற்காக உதவிபெறும் அந்தத் தனியார் பள்ளிகள் ஆற்றிவரும் சிறந்த பணியின் உயர்வைக் குறைத்து மதிப்பிடுவதோ, தாழ்த்திப் பேசுவதோ, நியாயமாகாது. நகரசபைகள் முதலிய உள்ளாட்சி மன்றங்கள் நடத்தி வருகிற ஆரம்பப் பள்ளிகளில் அளிக்கப்படுகிற கல்வியின் தரம், கட்டுப்பாட்டின் நிலை, ஒழுக்கத்தின் சிறப்பு ஆகியவற்றை விட உதவி பெறும் தனியார் பள்ளிகளில் தரப்படுகிற கல்வியின் தரம் முதலியன மிக உயர்ந்தனவாய், மிகச் சிறப்பாய் இருக்கின்றன என்று பொது மக்கள் கருதுகிறார்கள். அந்தக் கருத்து, இயற்கையாகத் தோன்றக்கூடியது; முற்றிலும் நியாயமானது. நகரசபைப் பள்ளிகளில் கட்டணம் வசூலிக்கப்படாமல் இருந்துங்கூட, உதவி பெறும் பள்ளிகளில் கட்டணம் வசூலிக்கப்பட்டுங்கூட, உதவிபெறும் தனியார் பள்ளிகளே பொதுமக்களிடம் மதிப்பும் செல்வாக்கும் புகழும் பெற்றுத் திகழ்வதற்குக் காரணம் மக்களின் இந்தக் கருத்தே ஆகும்.

உதவி பெறும் பள்ளிகளுக்கு அரசாங்கத்தார் அளிக்கிற உதவித் தொகைகள் பற்றிய நுணுக்கங்களை நான் ஆராய விரும்பவில்லை. ஆனால் அந்த உதவித் தொகைகள் மூன்று வகையானவை என்று மட்டும் நான் குறிப்பிட விரும்புகிறேன்: 1. ஆசிரிய ஊதிய உதவித் தொகை. 2. நிர்வாக உதவித் தொகை. 3. நஷ்ட ஈட்டு உதவித் தொகை. ஏழைச் சிறுமிகள், ஷெட்யூல்டு வகுப்பினர், மலைசாதியினர் ஆகியோரின் குழந்தைகள், பிற்பட்ட வகுப்பினரின் குழந்தைகள், என். ஜி. ஓக்கள்—ஆசிரியர்கள்—ஆண்டுக்கு 1200 ரூபாய் அல்லது அதற்குக் குறைந்த வருவாய் உள்ள பெற்றோரின் குழந்தைகள் ஆகியோருக்கு இலவசக் கல்வி அளித்ததன் காரணமாக ஏற்பட்ட நஷ்டத்தை ஈடு கட்டுவதற்காக அளிக்கப்படுவதே கடைசியில் குறிப்பிட்ட உதவித் தொகையாகும்.

"அரசாங்கத்திடமிருந்து கிடைக்கிற ஆசிரிய ஊதிய உதவித் தொகை மட்டுமே ஆசிரியர்களுக்கு ஊதியமாகத் தரப்படுகிறது என்றும், மாணவர்களிடமிருந்து கட்டணமாகக் கிடைக்கிற தொகையிலும் அரசாங்கத்திடமிருந்து நஷ்ட ஈடாகக் கிடைக்கிற தொகையிலும், பள்ளிக்கூடத்தின் நிர்வாகச் செலவு போக மிச்சமிருக்கிறது என்றும் தெரிவிக்கப்பட்டது. பெரும்பாலும் இந்த மிச்சத் தொகையானது பள்ளிக்கூடத்தின் வளர்ச்சிக்குச் செலவிடப்படுவதில்லை"

என்று வெள்ளை அறிக்கையின் 41வது பத்தி தெரிவிக்கிறது. இந்த நிலை இருப்பது உண்மையானால் நான் ஒரு யோசனையைத் தெரிவிக்க விரும்புகிறேன். பள்ளிக்கூடத்தை நடத்தி வருவதற்காக நிர்வாகிக்குக் கௌரவ ஊதியத் தொகை (honorarium) ஒன்றைக் குறிப்பிட்டுவிட்டு, அதுபோக மிச்சமிருக்கிற வருவாய் முழுவதையும் பள்ளியின் வளர்ச்சிக்காகவே செலவிடவேண்டும் என்று அரசாங்கத்தார் ஒரு விதி வகுக்கலாம் என்பதே என் யோசனை.

பொது மக்களில் ஒருவன் என்கிற முறையில், மூன்று கொள்கைகளை வற்புறுத்திக் கூறவேண்டியது என் கடமையாகும். 1. ஆசிரியர்கள், அவர்களுக்கு உரிய ஊதியத்தை முழுமையாகவும் தாமதம் இல்லாமலும் பெறவேண்டும். இது முதல் கொள்கை. ஆசிரியர்களின் ஊதியங்கள் குறைவாக அல்லது தாமதமாகத் தரப்படுகின்றன என்று பல புகார்கள் கிடைத்ததன் விளைவாக அரசாங்கத்தார், தாங்களே நேரடியாக ஆசிரியர்களுக்கு ஊதியம் அளிக்க ஏற்பாடு செய்துள்ளார்கள். இந்தப் புதிய ஏற்பாட்டால் பல விரும்பத் தகாத விளைவுகள் ஏற்படும் என்று நான் கருதுகிறேன். ஆசிரியர்களின் ஊதியம் முழுமையாகவும் உடனடியாகவும் நிர்வாகிகளால் தரப்படுவதற்குத் தேவையான ஏற்பாடுகளை மட்டும் செய்தால் போதும். நேரடி ஏற்பாடு தேவையில்லை.

2. கட்டணம் வசூலிக்கும் பள்ளி அல்லது கட்டணம் வசூலிக்காத பள்ளி என்கிற அரசாங்கத்தின் புதிய உத்தரவு காரணமாக உதவி பெறும் பள்ளி நிர்வாகத்தில் செலவுக்குத் தேவையான வரவு கிடைக்காமல் பற்றுக்குறை ஏற்பட்டுப் பணமின்றித் திண்டாடும் நிலை பள்ளி நிர்வாகிகளுக்கு ஏற்படக் கூடாது. இது இரண்டாவது கொள்கை.

3. நகரப் பகுதிகளில் உள்ள உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளில் அளிக்கப்படும் கல்வியின் தரம் இப்போது உயர்ந்த நிலையில் உள்ளது. பொது மக்களின் நன்மையை முன்னிட்டு, இந்த உயர்ந்த தரம் தொடர்ந்து இருக்கும்படிப் பார்த்துக்கொள்ளவேண்டும். ஊராட்சி மன்றங்கள், நகராட்சி மன்றங்கள், மாவட்ட ஆட்சி மன்றங்கள் ஆகியவற்றால் நடத்தப்படும் பள்ளிகளில், எவ்வெவற்றில் கல்வித் தரம் குறைவாக உள்ளதோ அவற்றில் அதை உயர்த்தவும், எவ்வெவற்றில் அது உயர்வாக உள்ளதோ அவற்றில் அந்த உயர்வை நிலைநிறுத்தவும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டும். இது மூன்றாவது கொள்கை.

அரசாங்கத்தாரின் புதிய உத்தரவை இந்த மூன்று கொள்கைகளின் அடிப்படையில் நின்று ஆராய்ந்து, உங்களுடைய கருத்துகளை உருவாக்கி, அரசாங்கத்துக்கு அறிவித்து, மக்களின் நன்மைக்கு ஏற்ற

திட்டங்களை நடைமுறைப்படுத்தவேண்டியது உங்கள் கடமையாகும். மாண்புமிகுந்த கல்வியமைச்சர் அவர்களும், கல்வித் துறை இயக்குநர் அவர்களும், சிறந்த அறிவும் பரந்த அனுபவமும் படைத்தவர்கள்; ஆகவே உங்களுடைய ஆய்வுரைகளை மிகுந்த கவனத்தோடு கேட்டு ஆவன செய்வார்கள் என்று நான் உறுதியாக நம்புகிறேன்.

புதிய உத்தரவு 1959–60ம் ஆண்டிலிருந்து நடைமுறைக்கு வரும் என்று அரசாங்கத்தார் அறிவித்திருக்கிறார்கள். பிரச்சினை மிகவும் சிக்கல் நிறைந்ததாக இருப்பதாலும், அதை அமைதியான முறையில் ஆலோசித்துப் பார்க்கவேண்டியது அவசியம் ஆதலாலும், உத்தரவின் அமுலை 1960-61–ம் ஆண்டிற்கு ஒத்திவைக்க வேண்டும் என்று நான் கேட்டுக்கொள்கிறேன்.

புதிய உத்தரவின்படி, கட்டணம் வாங்கும் பள்ளிகளுக்கு அரசாங்கத்தின் அங்கீகாரம் மட்டும் கிடைக்குமே தவிர உதவித் தொகை எதுவும் கிடைக்காது. கட்டணம் வாங்காத பள்ளிகளுக்கு, 1959–60 லிருந்து, வழக்கம்போல ஆசிரிய ஊதிய உதவித் தொகையும், அதில் 15%க்கு மேற்படாத உதவித் தொகையும் கிடைக்கும். அதனை 20% ஆக உயர்த்தக் கல்வித் துறை இயக்குநருக்கு (D.P.I.) அதிகாரம் உண்டு.

அரசாங்கத்தார் தெரிவித்துள்ள இரண்டு விதிகளுமே சரியான வழிகளாக இல்லை. கட்டணம் வாங்கும் பள்ளிகள் அரசாங்க உதவி எதுவும் கிடைக்காது என்ற காரணத்தால், மிக அதிகமான அளவு கட்டணத்தை வசூலித்தால்தான், செலவைச் சரிக்கட்ட முடியும். ஆனால் அவ்வளவு உயர்ந்த கட்டணத்தை வசூலித்தால், பள்ளிக்கூடங்கள் செல்வாக்கை இழக்கும். போதுமான அளவு மாணவர்கள் கிடைக்கமாட்டார்கள். மிக அதிகமான கட்டணம் வசூலிப்பது, பொன்முட்டை இட்ட வாத்தைக் கொன்ற கதையாகவே முடியும்.

கட்டணம் வாங்காத பள்ளிகளாக இருக்கலாம் என்றாலோ, அரசாங்கம் அளிக்கக்கூடிய 15 அல்லது 20 சதவிகிதத் தொகையை மட்டும் வைத்துக்கொண்டு, பள்ளிக்கூடக் கட்டிட வாடகை, குமாஸ்தாக்கள்—கட்டிடத்தைப் பெருக்கித் தூய்மை செய்யும் வேலைக்காரிகள்—தோட்டிகள்—பியூன்கள் ஆகியோரின் ஊதியம், அச்சுக்கூலி, தபாற் செலவு, மேசை நாற்காலி முதலியன வாங்குதல், ஆயாக்களின் ஊதியம், ஆசிரியர்களின் நல்வாழ்வு நிதிக்கு நிர்வாகிகளின் பங்கு, போக்குவரத்துச் செலவு, தேசப்படங்கள் வெண்சுண்ணத் துண்டுகள் முதலியன வாங்குதல்—பிற செலவுகள் யாவற்றையும் ஈடுசெய்வது இயலாத செயலே ஆகும். இவ்வளவும் தவிர, பள்ளிக் கட்டிடத்தைப் பழுது பார்ப்பதற்கும், அது சொந்தக் கட்டிடமானால் வரி செலுத்துவதற்கும் வேறு பணம் தேவைப்படும்.

ஆகவே, கட்டணம் வாங்கும் பள்ளியும் சரி, கட்டணம் வாங்காத பள்ளியும் சரி, புதிய உத்திரவின்படி, தன்னுடைய செலவையும் வரவையும் சரிக்கட்டுவது என்பது முடியாத காரியமே ஆகும்.

இந்தச் சிக்கலைத் தீர்ப்பதற்கு உரிய சிறந்த பரிகாரம் ஒன்றே ஒன்றுதான் இருக்கிறது. மேலே குறிப்பிடப்பட்ட இருவகைப் பள்ளிகளிலே எந்த வகைப் பள்ளியானாலும், வரவைவிடச் செலவு எந்த அளவு அதிகப்படுகிறதோ அந்த அதிகப்படிச் செலவு முழுவதையும் அரசாங்கத்தாரே ஏற்றுக் கொள்ள வேண்டும். இதுவே அந்தப் பரிகாரம்.

நடைமுறையில் அரசாங்கத்தார் கீழ்க்கண்ட ஏற்பாடுகளை ஒப்புக் கொள்வார்களானால் நிர்வாகிகளுக்கு ஏற்பட்டுள்ள சிக்கல் எளிதில் தீர்ந்துவிடும்.

1. பள்ளிக்கூடக் கட்டிடம், வாடகைக் கட்டிடமானால், கட்டிட வாடகை முழுவதையும் அரசாங்கத்தாரே தரவேண்டும். சொந்தக் கட்டிடமானால், முனிசிபல் வரிகளையும் பழுது பார்க்கும் செலவுகளையும் அரசாங்கம் ஏற்க வேண்டும்.

2. கட்டணம் வாங்காத உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகளுக்கு, அரசாங்கத்தார், ஆசிரிய ஊதிய உதவித் தொகையையும், 15 முதல் 20 சத விகிதம் வரை உள்ள நிர்வாக உதவித் தொகையையும், கட்டணம் எந்தப் பிள்ளையிடமிருந்தும் வாங்கப் படாததால் எல்லாப் பிள்ளைகளுக்கும் நஷ்ட ஈட்டுத் தொகையையும் தரவேண்டும்.

3. கட்டணம் வாங்கும் பள்ளிகளில் அரசாங்கத்தார் பற்றுக் குறை ஏற்படாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அத்தகைய பள்ளிகளில்கூட என். ஜி. ஓக்களின் பிள்ளைகள் போன்ற பலர் கட்டணம் கட்டாமல் இருப்பர். ஆகவே அத்தகைய பள்ளிகளுக்கு, அரசாங்கத்தார், 30 சத விகித நிர்வாக உதவித் தொகை அல்லது கட்டணம் இல்லாமல் படிக்கும் மாணவன் ஒவ்வொருவனுக்கும், 1 முதல் 5 வரை உள்ள வகுப்புகளுக்கு, முறையே அணா 8, 10, 12, 14, ரூ. 1 என்கிற விகிதத்தில் நஷ்ட ஈடு அளிக்க வேண்டும். கட்டணம் வாங்கும் ஆரம்பப் பள்ளிகள், செலவுக்குத் தேவையான வரவு இல்லாமல் கஷ்டப்பட்டு மூடப்படுகிற நிலையை அரசாங்கத்தார் ஒரு நாளும் உருவாக்கக் கூடாது. ஏனென்றால், அத்தகைய பள்ளிகள், ஆரம்பக் கல்வியின் வளர்ச்சியில் பொறுப்பும் சிறப்பும் மிகுந்த ஒரு பாகத்தை ஏற்றுள்ளன.

ஆரம்பக் கல்வியைப் பரப்பும் பணியில் ஈடுபட்டுள்ள எல்லா வகைப் பள்ளிகளையும் போற்றி ஆதரிக்க வேண்டியது அரசாங்கத்தின்

கடமைமட்டுமல்ல, பொதுமக்களின் கடமையும் ஆகும். மற்ெறாரு முக்கியமான உண்மையை அனைவரும் நினைவில் நிறுத்தவேண்டும். கல்வியின் வளர்ச்சிக்காகத் தீட்டப்படுகிற எந்தத் திட்டத்திற்கும் ஆணிவேர் போன்றவர் ஆசிரியரே ஆகும். ஆகவே ஆசிரியர்களின் வாழ்க்கையை மகிழ்ச்சியுள்ளதாக மாற்றி அமைக்கவேண்டியது எவ்வளவும் அவசியம் என்பதையும், அவர்களுக்கு உரிய சிறப்பையும் செல்வாக்கையும் அவர்களுக்குத் தரவேண்டியது எத்துணை இன்றியமையாதது என்பதையும், அரசினரும் மக்களும் ஒருங்கே உணர்தல் வேண்டும்.

உதவிபெறும் ஆரம்பப் பள்ளிகள் சிறப்பான முறையில் தொடர்ந்து பணியாற்றுவதற்குத் தேவையான எல்லா ஏற்பாடுகளையும் அரசாங்கத்தார் மேற்கொள்ள வேண்டியது அவர்களுடைய கடமை என்பதை மீண்டும் எடுத்துக்கூறி, என்னுடைய தலைமையுரையை முடித்துக் கொள்கிறேன்.

ஆசிரியர் கழகத் துவக்க விழா

எளாவூர் மையம்,

பொன்னேரி வட்டம், செங்கற்பட்டு மாவட்டம்.

10 – 4 – '59 அன்று காலை 10-30 மணிக்கு ஷை எளாவூர் தனபாக்கியம்மாள் உயர்நிலைத் துவக்கப்பள்ளியில் செங்கற்பட்டு மாவட்டக் கல்வி அதிகாரி உயர்திரு. A. J. ராயன் அவர்கள் தலைமையின் கீழ், கும்மிடிப்பூண்டித் தொகுதி, சென்னை சட்ட மன்ற உறுப்பினரும், ஷை எளாவூர் தனபாக்கியம்மாள் உயர்நிலைத் துவக்கப்பள்ளி மானேஜருமான திருமதி கே. கமலாம்புஜம்மாள் அவர்கள் ஷை விழாவைத் துவக்கி வைத்தார்கள். அவ்வமயம் பொன்னேரி கழக உயர்நிலைப்பள்ளித் தலைமைத் தமிழாசிரியர் உயர்திரு. சிவாஜி அவர்களால் சிறப்புச் சொற்பொழி வாற்றப்பட்டது. பகல் 12 மணிக்கு உயர்திரு. கே. கஜபதி ரெட்டியார் அவர்களால் சுமார் நூறு ஆசிரியர்களுக்கு விருந்து அளிக்கப்பட்டது.

பிற்பகல் 2 மணிக்கு ஷை மாவட்டக் கல்வி அதிகாரி அவர்கள் தலைமையின் கீழ்ச் செயலாளர் தேர்தல் நடைபெற்றது. ஷை தனபாக்கியம்மாள் உயர்நிலைத் துவக்கப் பள்ளி ஆசிரியர் M. நடராஜன் அவர்கள் ஷை கழக ஆசிரியர்களால் செயலாளராக ஏக மனதாகத் தேர்ந்தெடுக்கப் பட்டார்.

M. நடராசன்,
செயலாளர்,
ஆசிரியர் கழகம், எளாவூர்.

சென்ற இதழ் தொடர்ச்சி:—

மருது பாண்டியர்

தாமரைக் கண்ணன்

காட்சி 25

புதுக்கோட்டை—தொண்டைமான் மனை

(தொண்டைமான், பிளாக்பர்ன், கருத்தான் மூவரும்.)

கருத்தான்:—உண்மைதானுங்க! என் தலை தப்பியது நீங்க செய்த புண்ணியம்; எங்கூட வந்தவன் கூண்டோட போயிட்டான். (பெருமூச்சுடன்) நான் மட்டும் எப்படியோ தப்பிப் பிழைச்சு வந்தேன். இந்தாங்க, அந்த ஓலே......

(கடிதத்தைக் கொடுக்கிறான்.)

பிளாக்பர்ன்:—(பிரித்துப் படித்தபின்) சபாஷ், கருத்தான்!

கருத்தான்:—நீங்க என்னவோ ஒரு சொல்லில் முடிச்சுட்டிங்க... நான் உயிரை கையால் பிடிச்சு வந்தேன்.

பிளாக்பர்ன்:—முக்கியமான செய்திதான்......

தொண்டை:—ஆங்கில அரசாங்கத்திற்கு, நீ செய்த உதவிக்கு என் பாராட்டு, கருத்தான்!

கருத்தான்:—பாராட்டில் என்னங்க இருக்குது. உப்பு சப்பில்லாத கதை அது! இப்ப உலகமே பணம் காசில் தானுங்க உருளுது!

தொண்டை:—நீ சொல்வது புரிகிறது. இதோ......

(சிறு பண முடிப்பை அவன் கைகளில் எறிகிறான். அதைத் தன் கண்களில் ஒத்திக்கொண்டே.....)

கருத்தான்:—ஒரு விஷயமுங்க...படமாத்தூர் தேவரையும் அவருடைய ஆட்களையும் கர்னல் துரையிடம் அழைச்சுகிட்டு போனேன். தேவரையே புதிய ராசாவாகப் பிரகடனப்படுத்த கம்பெனிக்கு எழுதி அனுமதி வாங்கணும்னு சொன்னாரு. சிவகங்கைக்கு அரசராக வேணும்னா நாலுகோட்டை கிராம மக்களின் சம்மதம் பெறணுமாம். முடிசூட்டுவதற்குள் அவர்களைச் சரிப்படுத்த வேண்டியது உங்களுடைய பொறுப்பு என்றார்.

பிளாக்பர்ன் :—*மிஸ்டர் புதுக்கோட்டை! பார்த்தீரா, எவ்வளவு தீவிரமாக வேலே நடக்கிறது. நீர் கறுத்தானிடம் பத்தாயிரம் பொன் கொடுங்கள். கறுத்தான்......*

கறுத்தான் :—வாட்......சார் !

பிளாக்பர்ன் :—*நீ நாலு கோட்டைக்குச் செல். அந்தப் பொன்னே வாரி இறைத்து, அவ்வூர் மக்களே வசியப்படுத்து! என்ன மிஸ்டர், புதுக்கோட்டை......!*

தொண்டை :—*அருமையான வழி! பாதாளம் வரையில் பாயும் பணம், பக்குவமில்லாதவர்களின் இதயத்தில் பாய்வதுதாஞ, கடினம்!*

(*இருவரும் சிரிக்கின்றனர். கறுத்தான் பணத்துடன் செல்கிருன்.*)

— திரை —

காட்சி 26

காளேயார்—கோவில்

காட்டிடையே ஒரு குடில்

(*மூத்தய்யன் மார்பில் வழியும் இரத்தத்துடன், தள்ளாடிக் கொண்டு வருகிருன். குடிசையின் வாயிற் பக்கம் வந்ததும்......*)

முத்தய்யன் :—*முனியம்மா......முனியம்மா !*

(*முனியம்மா தட்டியைத் திறந்துகொண்டு வருகிருள்.*)

முனியம்மா :—(*வெறுப்புடன்*) என்ன? உனக்கு என்ன வந்தது கேடு?

முத்தய்யன்:—*கறுத்தான்...கறுத்...தா...ன் என்ஃன ஈட்டியாலே...*

(*நிற்கமுடியாமல் அருகிலிருக்கும் கம்பத்தைப் பிடித்துக்கொள்கிருன்.*)

முனியம்மா :—*மார்பிலே குத்திட்டானு...? நெஞ்சுக் குழியிலே குத்தி உன்னேக் கொல்லாம போனுனே—அவன் ஒரு முட்டாள்...,நீ ஒழிஞ்சாதான் எனக்கு நிம்மதி...நான் உன்னே கட்டிகிட்டு என்ன சுகத்தை அனுபவிச்சேன்......சீதைமாதிரி*

காட்டிலே வந்து குடிசை போட்டுகிட்டு கல்லிலும் முள்ளிலும் கஷ்டப்படறேன். ஒரு நல்ல சேலே உண்டா...நாலுபேரைப் போல நகை நட்டு உண்டா...நாக்குக்கு ருசியா திங்கறதுக்கு நாலுவித பதார்த்தம் உண்டா...உலேவச்சு நாலு நாளாச்சு...... அடுப்பிலே பூனே தூங்குது......

முத்தய்யன் :—அடிப்பாவி! நான் உயிருக்கு மன்ருடறேன்; நீ என்னடி உபங்கியாசம் பண்றே!

முனியம்மா :—உன்னே கட்டிகிட்டதுக்கு (வேற என்ன செய்ய முடியும்? கறுத்தானே பாரு...கந்தல் துணி கூட இல்லாம இருந் தான். இப்போ, காலிலேயும் கையிலேயும் உறை தச்சு போட்டு கிட்டு துரை மாதிரி போருன்...வர்ரான்...! நீயும் இந்த அன்னக்காவடி காரனுகளே விட்டுவிடு; வெள்ளேக்காரங்க கூட சேர்ந்துடு!!

முத்தய்யன் :—சீ! நயவஞ்சகி! நான் ஒன்றும் சோற்ருலடித்த நாய் சென்மம் எடுக்கல. இனிமேல், செத்தால்கூட உன் கையால் தண்ணி வாங்கி குடிக்கிறதில்லே. என் உசிரு இருக்கிறவரைக் கும் மருதய்யங்களுக்கு உழைச்சுட்டு, உன் கண்ணிலே படாம எங்கேயாவது விழுந்து சாகிறேன்.

(வலி பொறுக்கமுடியாமல் திணறியபடியே செல்கிருன்.)

முனியம்மா :—(முகத்தைச் சுளித்து) போளு போயேன். நான் எங்க ஆத்தா வீட்டிற்குப் போறேன்.

(மூட்டை முடிச்சுக்களேக் கட்டிக்கொண்டு கிளம்புகிருள்.)

முனியம்மா :—தாலி கட்டிக்கின நாளா பாவிக்கு உழைப்பு எடுத்து ஓடாய் தேய்ஞ்சு போனே(ன்). பவிஷுகெட்டவன்...... பாழாய்ப் போக...!

(கையை கொடித்துவிட்டு, வேறு திசை யில் மூட்டைகளுடன் செல்கிருள்.)

— திரை —

காட்சி 27

நாலு கோட்டை— ஊர் மன்றம்

(நான்கைந்து பெருந்தனக்காரர்களும், நாட்டாண்மைக்காரர்களும் அமர்ந்துள்ள

னர். அவர்கள் கைகளில் கறுத்தான் பொற் காசுகளை அள்ளி அள்ளிப் போடுகிறான். ஒரு பெரியவர் மட்டும் பொன் வாங்க மறுக்கின்றார். கடைசியில்......)

கறுத்தான் :—நான் சொன்னதெல்லாம் ஞாபகம் இருக்குதா... நாளைக்கு ஒருத்தரும் மறுப்பு சொல்லக் கூடாது?

பெரியவர் :—நான் சொல்வேன்......

கறுத்தான் :—வாட்...வாட்...?

பெரியவர் :—படமாத்தூர் தேவர் புதிய ராசாவாக வரக்கூடாது... மருது பாண்டியரே இருக்கணும்...

கறுத்தான் :—வா...ட்..., பெரியவரே! இவ்வளவு பேரு சும்மா இருக்காங்க. நீங்க எதிர்த்து பேசறீங்களே...அப்போ, நீங்க மட்டும் அறிவாளி...இவங்களெல்லாம் முட்டாளா...?

ஒருவர் :—ஆமாம்...நாங்க மட்டும் முட்டாளா என்ன?

பெரியவர் :—நீங்க கைக்கூலி பெற்றுக்கொண்டு மனச்சாட்சிக்கு விரோதமா ஒத்துக்கறீங்க...

மற்றவர் :—வேணுமானால் நீங்களும் ஆயிரம் இரண்டாயிரம் வாங்கிக்கொள்ளுங்களேன்.

கறுத்தான் :—இன்னும் அதிகமா வேண்டுமென்றால் வாய்விட்டுக் கேளுங்கள். நமக்குள்ளே கூச்சம் எதுக்கு...சும்மா கேளுங்க ...தாராளமாக தர்ரோம்.

பெரியவர் :—அந்த மாதிரியான ஈனப் பொழைப்பு எனக்கு வேணாம்.

(எழுந்து சென்று விடுகின்றார்.)

கறுத்தான் :—பாருங்க! தேவர் ராசாவா வருவதில் இவருக்கு எவ்வளவு பொறுமை? இந்த மாதிரிதான் ஒரு நல்ல காரியம் செய்யப் போனா, இதைப்போல காளான்பிடுங்கிக் கலாட்டா பண்றது. நான் உங்களுக்குக் கைக்கூலி கொடுத்தேனாமே... இது எந்த கடவுளுக்கு அடுக்கும்? நான் அன்பளிப்புதானே கொடுத்தேன். நீங்க என்ன சொல்றீங்க......?

ஒருவர் :—அவர் கிடக்கிறார்...தள்ளுங்க...!

மற்றவர் :—தேவரை நாங்க ஆதரிக்கறோமுங்க!

கறுத்தான் :—*ஆல்ரைட்! அது போதும் எங்களுக்கு...நான் வரட்டுமா? வரட்.....?*

அனைவரும் :—(*எழுந்து*) செய்யுங்க!

(*கறுத்தான் செல்கிறான், மகிழ்ச்சியுடன். மற்றவர் பேசிக்கொண்டே நடக்கின்றனர்.*)

ஒருவர் :—(*தமது குடுமியைத் தட்டிக்கொண்டே*) *பார்த்தியா, அண்ணே! கறுத்தான் இப்ப எல்லாம் இங்கிலீசுல பேசுறான்... என்னவோ 'வாட்டு'ங்கறான்.....'கிட்டு'ங்கறான். நமக்கு ஒண்ணுமே புரியல.....*

இன்னொருவர் :—*அது போவட்டும்...'ரயிட்டோ...கியிட்டோ' எங்கிறானே.! அப்ப எப்படி ரெண்டு கையையும் சோப்பியிலே போட்டுகிட்டு சொல்றா(ன்), கவனிச்சிங்களா?*

மற்றவர் :—*அவன் இப்ப வேட்டி சட்டையையே தொடறதில்லே, அண்ணே! வெள்ளைக்கார துரைங்க கூடவே குதிரையிலே போறானும்...காப்பி தண்ணி குடிக்கறானும்.....*

ஒருவர் :—*இப்ப எல்லாம் அவன் கையால சாப்பிடறதில்லையாமே... காண்டியாலேதான் சாப்பிடறானும்.....*

மற்றவர் :—(*பெருமூச்சுடன்*)*ம்.....நல்ல வழிக்கு வந்தவன்:*

ஒருவர் :—*நீங்க வழியைப் பார்த்து போங்க.....கீழே முள்ளு கெடக்குது...!*

(*வீதியின் திருப்பத்தில் மறைகின்றனர்.*)

— திரை —

காட்சி 28

12 செப்டம்பர் 1801

சோழவரம்—கோயில்

(*படமாத்தூர் கௌரி வல்லப பெரிய உடையத் தேவன் அலங்கரிக்கப்பட்ட யானையின் மீது ஊர்வலமாக வருகிறான். அவனுடன் கர்னல் அக்நியு, வெல்ஷ், பிளாக்பர்ன், தொண்டைமான், வேதியர், கறுத்தான் முதலியோரும், நாலு கோட்டை பிரமுகர்களும் வருகின்றனர். அனைவரும் கோயிலில் குழுமுகின்றனர்.*)

அக்நியு :—தோழர்களே! சிவகங்கை ஜமீன் தமக்கு நியாயமான முறையில் சேரவேண்டும் என்று படமாத்தூர் தேவர் எங்களிடம் முறையிட்டுக் கொண்டார். இல்லையா, தோழரே?

தேவர் :—ஆமாம்......

அக்நியு :—அதன்படி நாங்கள் அவரை இந்த சீமைக்குப் புதிய அரசராக நியமிக்கிறோம். நீங்கள் கேட்கலாம் பழைய அரசர்கள் மருது சேர்வைக்காரர்கள் என்ன ஆனார்கள் என்று. அவர்கள் தேசத்துரோகிகளாகிவிட்டனர். கம்பெனி அவர்களுக்கு எவ்வளவோ சலுகை அளித்தும் கப்பம் கட்டவில்லை! மக்களுக்கு நன்மை செய்யாமல் தான்தோன்றித்தனமாக நடந்துகொண்டனர். இல்லை, கறுத்தான்?

கறுத்தான் :—ஆமாம். உண்மைதான்!

அக்நியு :—நாங்கள்தான் வெள்ளையர்...விரோதிகள். எங்களைக் கொல்வதில் நியாயம் இருக்கிறது. ஆனால், எங்களுக்கு உதவியாக வந்த புதுக்கோட்டை, எட்டயபுரத்து தமிழர்களைக்கூட அநியாயமாகக் கொன்று குவித்தனர். இது எப்படி நியாயமாகும்? அவர்களுக்கு 'தமிழ்...தமிழர்' என்ற உணர்ச்சியிருந்தால் அப்படிச் செய்திருப்பார்களா...?

தொண்டை :—செய்திருக்கவே மாட்டார்கள். அவர்கள் துரோகிகள். முக்காலும் உண்மை!

அக்நியு :—அது மட்டுமா? முன்பொரு தடவை தங்கள் அரண்மனை இருந்த சிறுவயலையே கொளுத்திவிட்டார்கள். கும்பினியாருக்கும் அவர்களுக்கும் விரோதம் என்றால் ஊர் என்ன செய்தது? அவர்களுக்குத் தமது சொந்த ஊரின்மீதே பற்றில்லாமல் தீ வைத்துப் பொசுக்கினார்களே......நாட்டுப் பற்றுமட்டும் எங்கிருந்து இருக்கும்? எதற்கெடுத்தாலும் குத்துவதும் கொளுத்துவதும்தானா? காட்டுமிராண்டிகள்! இந்த நாடு பிடிக்கவில்லையென்றால், மூட்டை முடிச்சுகளைக் கட்டிக்கொண்டு எங்கேயாவது ஓடிப்போவது. புரட்சி செய்கிறார்களாம் புரட்சி...... போக்கற்றவர்கள்!

ஆகவேதான், மருதுபாண்டியரை நீக்கிவிட்டு, அதிகார பூர்வமாக படமாத்தூர் உடையத்தேவரை அரசராக்குகிறோம். தேவருக்குப் பாதுகாப்பாக நூறு வீர மறவர்களைக் கொடுக்கும்படி மிஸ்டர் புதுக்கோட்டைத் தொண்டைமானைக் கேட்டுக் கொள்கிறேன்.

(அமர்கிறான்.)

தொண்டை :—பெரியோர்களே! மருது சகோதரர்கள் எனக்கு விரோதிகள் என்பதால் நான் குற்றம் சாட்டவில்லை. நான் அவ்வளவு கேவலமான எண்ணம் உடையவனும் இல்லை. உண்மையை உங்களுக்குக் கூறுகிறேன். சிவகெங்கைச் சீமை மருதப்பர்களின் பூர்வீகச் சொத்து அல்ல. வேலு நாச்சியை ஏமாற்றி அவள் இறக்கும்போது வாங்கிக்கொண்டார்கள். அவர்கள் சாத்வீகமான முறையில் நடந்திருந்தாலும் பாதகமில்லை.... போனால் போகிறது என்று விட்டு விடலாம். ஆனால், அவர்கள் அக்கிரமக்காரர்களாக...அட்டூழியத்தின் சின்னங்களாக இருக்கிறார்கள். இரண்டு மூன்று வாரத்திற்கு முன்னால், என்னிடம் வந்து, 'கொடு ஒரு லட்சம் பொன்' என்று கூப்பாடு போட்டார்கள். நான் 'மாட்டேன்' என்றேன். அவ்வளவுதான். 'உன்னைக் குத்துவேன்......வெட்டுவேன்; புதுக்கோட்டையைக் கொளுத்துவேன்...பொசுக்குவேன்' என்று மிரட்டினர். சத்தம் கேட்ட என் ஆட்கள் வருவதற்குள் சுவரேறிக் குதித்து மாயமாய் மறைந்துவிட்டார்கள். இந்த மாதிரியான அக்கிரமச் செயல்களாலேயே அவர்கள் போக்கு எனக்குப் பிடிக்கவில்லை.

அந்த மனிதாபிமானம் இல்லாத மடையர்களை நீக்கிவிட்டு, என்னைப்போல சுத்தவீரரும், நாட்டுப் பற்றும் மொழிப் பற்றும் ஒருங்கே கொண்டவரும், என் நண்பருமான ஸ்ரீ படமாத்தூர் கௌரி வல்லப பெரிய உடையத்தேவரை அரசராக்குவதில் பெரு மகிழ்ச்சியடைகிறேன். இந்த நல்ல காரியத்தை முன்னின்று நடத்தும் கர்னல் அக்னியு துரை அவர்களை மனமாரப் போற்றுகிறேன். ஒரு நூறு என்ன...ஒன்பது நூறு வீரர்களைத் தேவருக்குப் பாதுகாப்பாக அனுப்பி வைக்கிறேன். விழாவுக்கு அனுமதி கொடுத்த நாலு கோட்டை பிரமுகர்களுக்கும் எங்கள் நன்றி.

அக்கிரமம் வீழ்ந்தே தீரும்...அதுபோல, மருது பாண்டியர் அரியணையிலிருந்து விழுந்தனர். உண்மை எப்போதும் வெல்லும் ...அதன்படி உத்தமர் படமாத்தூர் தேவர் வெற்றி பெறுகிறார்!

தீயோர்களின் பேச்சைக் கேட்டுப் பேயாட்டம் போடாமல் நாங்கள் சம்பிரதாயத்தை மதிக்கிறோம். ஆகவே, சாஸ்திரோக்தமாக இப்போது புரோகிதர் இந்த முடிசூட்டு விழாவை நடத்தி வைப்பார்.

(வேதியர் நெருப்பில் நெய்பெய்து, மந்திரம் செபித்து யாகம் வளர்த்து, முடிசூட்டி வைக்கிறார். இன்னிசையும் வாழ்த்தொலியும் வானைப் பிளக்கின்றன.)

— திரை — (தொடரும்)

இப்படியும் நடக்கின்றன!

கிறிஸ்துமஸ் கார்டில் சிறு கதை

எத்தனையோ வகையான கார்டுகளில் கிறிஸ்துமஸ் உணர்ச்சியை மக்கள் வெளிப்படுத்துகிறார்கள். இவ்வாண்டு ஒரு வியாபார ஸ்தாபனம் அனுப்பிய கார்டில் ஒரு சிறு கதையே அச்சிடப்பட்டிருந்தது. சென்ற தலைமுறையில் வாழ்ந்த புகழ் பெற்ற அமெரிக்கச் சிறு கதை ஆசிரியர் ஓ ஹென்றி எழுதிய "மாகியின் பரிசு" என்ற பிரபலமான கதையே அது. கிறிஸ்துமஸ் பரிசுத் தத்துவத்தைப் பற்றிய உணர்ச்சி மிக்க கதை.

உங்களுக்குத் தெரியுமா ?

ஒரு திமிங்கலத்தின் எடை 25 யானைகளின் எடைக்குச் சமம். திமிங்கிலம் 33 மீட்டர் நீளத்துக்கு வளரக்கூடியது. ஒரு திமிங்கிலத்திலிருந்து சராசரி 70 டன் இறைச்சியும் 35 டன் கொழுப்பும் கிடைக்கும். பிறக்கும்போது திமிங்கிலக் குட்டியின் எடை 6 டன்கள். தாய்ப் பால் குடிக்கும் காலத்தில் நாள் ஒன்றுக்கு அதன் எடை 100 கிலோகிராம் அதிகரிக்கிறது. வளர்ந்து முதிர்ந்த திமிங்கிலத்தின் நாக்கு மட்டும் 3 டன் எடையிருக்கும். அதன் இருதயம் சுமார் 70 கிலோகிராம் எடையுடையது. 8 டன் எடையுள்ள இரத்தம் அதன் உடலில் ஓடுகிறது. அதன் சுவாசப் பைகளில் 14,000 லிட்டர் காற்று தங்க முடியும். திமிங்கிலத்தின் மொத்த எடை 120 டன்களுக்கு மேலிருக்கும்.

பூட்ஸ் பெட்டியில் பிறந்த குழந்தை

இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் தென் ஆப்பிரிக்காவில் க்ருஜர்ஸ்ராப் என்னுமிடத்தில் ஒருவர் வாசல் கதவைத் திறந்த போது ஒரு செருப்புப் பெட்டி அங்கே இருந்ததைக் கண்டார். அதன் உள்ளே ஒரு பெண் குழந்தை இருந்தது.

அந்த வீட்டுக்காரர்கள் அக் குழந்தையை வளர்த்தனர். அந்தக் குழந்தை வளர்ந்து பெரியவளாகி, இப்போது மணம் செய்துகொண்டு மூன்று குழந்தைகளுக்கும் தாயாகி விட்டாள். ஆனால் இன்னும் தன் தாய் யார், எப்படியிருப்பாள் என்று அவளுக்குத் தெரியவில்லை. சமீபத்தில் இதற்காக அவள் பத்திரிகைகளில் விளம்பரம் செய்திருக்கிறாள்.

ஒரே மூச்சில் முழு நாவல்

எட்கார் வாலஸ் என்ற புகழ் பெற்ற மர்மக் கதை நூலாசிரியர் ஒரு சமயம் ஒரே மூச்சில் 'பேயினுடைய ஆள்' என்ற நாவலை எழுதி முடித்தார். இடைவிடாமல் 60 மணி நேரம் அவர் கதை

யைச் சொல்லிக் கொண்டே வர, பல குமாஸ்தாக்கள் மாறி மாறி சுருக்கெழுத்தில் குறித்துக் கொண்டார்கள்.

கதை முடிந்ததும் அலுத்துப் போய் இரண்டு நாள் படுத்த படுக்கையாகக் கிடந்தார் வாலஸ். கதை வெளியானதும் 4,000 பவுன் சம்பாதித்தார்!

நாற்பது ஆண்டுகள் ஆணாக நடித்தவள்

சென்ற நூற்றாண்டில் பிரிட்டிஷ் சேனையில் வைத்திய அதிகாரியாக நாற்பது ஆண்டுகள் வேலை பார்த்துத் தமது எழுபதாவது வயதில் ஒருவர் காலமானார். அந்த அதிகாரி ஒரு "அவள்" என்பது கடைசிவரை ரகசியமாகவே இருந்தது!

இந்தச் சம்பவத்தைக்கருவாகக் கொண்டு, இதுவரை இரண்டு நாவல்கள்கூட எழுதப்பட்டுள்ளன. ஆனால் இப்போதுதான் "டாக்டர் ஜேம்ஸ் பாரியின் வரலாறு" புத்தகமாக வெளி வந்துள்ளது.

ஜேம்ஸ் பாரி என்ற அந்தப் பெண்ணின் இளமை வரலாறு யாருக்கும் தெரியவில்லை. அவள் யாராவது ஒரு பெரிய மனுஷருக்கு ரகசியமாகப் பிறந்த பெண்ணாக இருக்கலாம். சிறு வயதில் அவள் ஒரு குழந்தையைப் பெற்றிருந்தாள் என்று நம்ப இடம் இருக்கிறது. ஆணாகவே நடித்து அவள் வைத்தியக் கல்லூரியில் சேர்ந்தாள். தென் ஆப்பிரிக்காவில் வேலை பார்த்தாள். அங்குள்ள அழகிய பெண்களைக் கிண்டல் செய்து விளையாடியும் இருக்கிறாள்.

அவளுக்கு ஒரே பயம் தான் நோயில் படுத்துவிட்டால், தான் ஒரு பெண் என்பதை வேறு வைத்தியர்கள் கண்டுபிடித்துவிடுவார்களே என்பதுதான் அது. அப்படியும் ஒரு முறை நடந்தது. டிரினிடட்டில் அவள் காமாலையால் படுத்தபோது, இரண்டு வைத்தியர்கள் அவள் ரகசியத்தைக் கண்டு பிடித்துவிட்டனர். உடனே அவள் அவர்களைக் கெஞ்சி ஆணையிட்டு, தான் சாகும்வரை இந்த ரகசியத்தை வெளியிடக் கூடாது என்று கேட்டுக்கொண்டாள்.

1865-ஆம் ஆண்டில் தனது 70-வது வயதில் இந்த வைத்திய அதிகாரி காலமானதும் அவர் சவத்தை ஒழுங்காக உடையுடுத்தி அடக்கம் செய்யத் தயாரிக்கச் சென்றாள் ஒரு வேலைக்காரி. சவத்தைத் தொட்ட இரண்டாவது நிமிஷத்தில், "என்ன ஐயா, என்னிடம் விளையாடுகிறீர்கள்? வைத்திய அதிகாரியின் பிணம் என்று, ஏதோ கிழவியின் பிணத்தைக் காட்டுகிறீர்களே?" என்றாள்.

நாற்பது வருஷ ரகசியம் உடைந்தது.

Edited, Printed and Published by P. VEERARAGHAVAN, at Venkatesan Press, 2-65, Broadway, Madras—1.

எமது

வெளியீடுகள்

ஆரம்பப் பாடசாலைகளுக்கும்,
உயர்தரப் பாடசாலைகளுக்கும்

புதிய பாடத் திட்டப்படியும், பழைய பாடத்
திட்டப்படியும் இயற்றப்பட்ட

புத்தகப் பட்டியல்

1959

அஸோஸியேஷன் பப்ளிஷிங் ஹௌஸ்
('ஆரம்பக் கல்வி' ஆபீஸ்)
94/95, புதுத் தெரு, மண்ணடி, சென்னை-1.
தபால் பெட்டி எண் 1818. : : டெலிபோன் எண் 55844.

ஓர் வேண்டுகோள்

★

கடந்த ஆண்டு புதிய பாடத் திட்டப்படி ஒன்று முதல் மூன்று வகுப்பு வரையிலும், பழைய பாடத் திட்டப்படி 4, 5 வகுப்புகளுக்கும், உயர்தர வகுப்புகளுக்கும், எமது "திரு. வி. க. தமிழ் வாசகங்கள்," "வீரபாண்டியன் தமிழ் வாசகங்களை" அல்லது மற்ற பாட புத்தகங்களை வைத்து ஆதரித்த ஆசிரியப் பெருமக்களுக்கும் மானேஜர்களுக்கும் எமது நன்றி.

அவ்வாறே இவ்வாண்டும் புதிய பாடத் திட்டப்படி 1 முதல் 4 வது வரையிலும், பழைய பாடத் திட்டப்படி 5–ஆம் வகுப்புக்கும் எமது 'ஆரம்பக் கல்வி'யில் வெளியிடப்பட்ட புத்தகங்களை வைத்து ஆதரிக்கும்படி மிகவும் வேண்டுகிறோம். 1 முதல் 5 வரையிலும் உள்ள தமிழ் வாசகங்கள் அல்லது இதர பாட புத்தகங்களுக்கு ரூ. 50 க்குக் குறையாமல் ஆர்டர் கொடுத்து ஆதரிக்கும் எய்டெட், பஞ்சாயத்து, லேபர் ஆரம்பப் பாடசாலைகளுக்கு எமது 'ஆரம்பக் கல்வி' மாதப் பத்திரிகை இலவசமாக மாதா மாதம் அனுப்பி வைக்கப்படும்.

சென்ற ஆண்டு காகித விலை, அளவுக்கு மீறி உயர்ந்துவிட்டதால் நாங்கள் 20 சத விகிதக் கழிவைக் குறைத்து 15 சத விகித கழிவு தந்துள்ளோம். அதனை வருத்தமின்றி ஏற்றுக்கொண்ட நண்பர்களுக்கு எமது நன்றி.

இவ்வாண்டும், காகித விலை குறையாமல் அப்படியே இருப்பதால், 1, 2, 3 வகுப்புகளுக்கு உள்ள வீரபாண்டியன் & திரு. வி. க. தமிழ் புத்தகங்கள் இவைகளுக்கு மட்டும், 15 சத விகிதக் கழிவு தரவும், 4–வது 5–வது தமிழ் புத்தகங்களுக்கும் 2 முதல் 5 வரையில் உள்ள இதர உப பாடங்களுக்கு 20 சத விகிதமும் தருவது என்று முடிவு செய்து இருக்கிறோம். இதனை ஆசிரிய நண்பர்கள் ஏற்றுக்கொள்வர் என்பது எமது நம்பிக்கை.

மாதிரிப்பிரதிகள் வேண்டுவோர் சென்ற ஆண்டு புதிய பாடத் திட்டப்படி வைத்த புத்தகங்கள் போக, இவ்வாண்டு புதிய பாடத் திட்டப்படி உள்ள 4—ம் வகுப்பு புத்தகத்திக்கும், பழைய பாடத் திட்டப்படி 5-ம் வகுப்புக்கு மாற்றம் செய்யும் திட்டம் இருந்தால் அவைகளுக்கு மட்டும் மாதிரிப் பிரதிகளுக்கு எழுத வேண்டுகிறோம்.

1 முதல் 3 வரை தமிழ் புத்தகங்களுக்கு இவ்வாண்டு மாதிரிப் பிரதிகளுக்கு எழுத வேண்டாம் என்று உங்களைப் பணிவுடன் வேண்டுகிறோம்.

இவ்விலைப்பட்டியலில் ஆங்காங்கு புத்தகத்தின் கீழ் குறித்துள்ள தொகைக்குத் தபால் பில்லைகளையோ அல்லது M. O. மூலமோ அனுப்பிப் பெற்றுக்கொள்ள வேண்டுகிறோம்.

‘ஆரம்பக் கல்வி’ ஆபீஸ், சென்னை.

★

ஆரம்பப் பள்ளிகளுக்கான எமது வெளியீடுகள்

திரு. வி. க. தமிழ் வாசகம்

ஆசிரியர் :

பி. வீரராகவன்.

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
முதல் வகுப்பு	0	5	0	3	28–5–'58
இரண்டாம் வகுப்பு	0	6	0	3	28–5–'58
மூன்றாம் வகுப்பு	0	8	0	3	28–5–'58
* நான்காம் வகுப்பு	0	12	0	...	...
ஐந்தாம் வகுப்பு	0	10	0	3	9–4–'58

4, 5 தமிழ்ப் புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 70 ந. பை. அனுப்பவும்.

வீரபாண்டியன் தமிழ் வாசகம்

ஆசிரியர் :

இராசாம்பாள் கோவிந்தராசன், M. A., L. T.

முதல் வகுப்பு	0	5	0	10	28–5–'58
இரண்டாம் வகுப்பு	0	6	0	5	28–5–'58
மூன்றாம் வகுப்பு	0	8	0	5	28–5–'58
* நான்காம் வகுப்பு	0	12	0	...	...
ஐந்தாம் வகுப்பு	0	10	0	3	9–4–'58

4, 5 தமிழ்ப் புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 70 ந. பை. அனுப்பவும்.

*புதிய பாடத் திட்டப்படி எழுதப்பட்டது. இப்புத்தகங்களின் அங்கீகாரத் தேதி பின்னர் அறிவிக்கிறோம்.

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர் :

M. விவேகானந்தா, B. Sc., L. T.

	புத்தகத்தின் விலை			கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
இரண்டாம் வகுப்பு	0	6	0	...	...
மூன்றாம் வகுப்பு	0	7	0	...	...
* நான்காம் வகுப்பு	0	10	0	...	...
ஐந்தாம் வகுப்பு	0	8	0	9	10–4–'57

இந்த நான்கு புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 1-25 ந. பை. அனுப்பவும்.

புதிய தேச ஆட்சி முறை

ஆசிரியர் :

D. சிவசங்கர ராவ், B. A., L. T.

ஐந்தாம் வகுப்பு	0	8	0	10	4–4–'56

மாதிரிப் பிரதிக்கு 25 ந. பை. அனுப்பவும்.

நம் நாட்டு வரலாறு

ஆசிரியர்கள் :

M. தக்ஷிணாமூர்த்தி, B. A., B. T.

T. S. உமாபதி, M.A., L.T.

ஐந்தாம் வகுப்பு	0	9	0	2	30–4–'58

மாதிரிப் பிரதி வேண்டுவோர் 40 ந.பை. அனுப்பவும்.

---

* புதிய பாடத் திட்டப்படி எழுதப்பட்டது. இப்புத்தகத்தின் அங்கீகாரத் தேதி பின்னர் அறிவிக்கிறோம்.

சிறுவர் கணக்கு நூல்

ஆசிரியர் :

பி. வீரராகவன்

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
இரண்டாம் வகுப்பு	0 8 0	...	...
* மூன்றாம் வகுப்பு	0 12 0	...	...
* நான்காம் வகுப்பு	0 14 0	...	...

இம் மூன்று புத்தகங்கள் மாதிரிப் பிரதிகள் வேண்டுவோர் ரூ. 1–40 ந. பை. அனுப்பவும்.

புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர் :

K. வீராசாமி, B.A., L.T.

ஐந்தாம் வகுப்பு	0 12 0	5	10–4–'57

இதை மாதிரிப் பிரதி வேண்டுவோர் 37 ந. பை. அனுப்பவும்.

சிறுவர் சமூக நூல்

ஆசிரியர் :

பி. வீரராகவன்

இரண்டாம் வகுப்பு	0 10 0	...
மூன்றாம் வகுப்பு	0 12 0	...
* த. சே. உமாபதி எழுதியது.		
* நான்காம் வகுப்பு (மாவட்டங்கள்)	1 14 0	...

இந்த மூன்று புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 2 அனுப்பவும். (நான்காம் வகுப்பு - மட்டும் வேண்டுவோர் ரூ. 1·30 ந. பை. அனுப்பவும்.)

---

* புதிய பாடத் திட்டப்படி எழுதப்பட்டது. இப்புத்தகத்தின் அங்கீகாரத் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

சிறுவர் பூகோளம்

ஆசிரியர் :

V. K. சேஷாத்திரி, B. A., L. T.

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
ஐந்தாம் வகுப்பு	0 12 0	9	4–4–'56

மாதிரிப் பிரதி வேண்டுவோர் 50 ந. பை. அனுப்பவும்.

புதிய பாடத் திட்டப்படி

4-ஆம் வகுப்பிற்கானவை

★ திரு. வி. க. தமிழ் வாசகம்

ஆசிரியர் : பி. வீரராகவன்.

விலை 12 அணா

சிறுவர் கணக்கு நூல்

ஆசிரியர் : பி. வீரராகவன்.

விலை 14 அணா

★ இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர் : M. விவேகானந்தா.

விலை 10 அணா

★ சிறுவர் சமூக நூல்

(மாவட்ட வாரியாக)

ஆசிரியர் : த. சே. உமாபதி.

விலை ரூ. 1–14–0.

---

* *அங்கீகாரமாகும் தேதியைப் பின்னர் அறிவிக்கப்படும்.*

புதிய பாடத் திட்டப்படி

4-ஆம் வகுப்பிற்கானவை

சமூக பாடப் பயிற்சி நூல்

(மாவட்டவாரியாக)

ஆசிரியர் : த. சே. உமாபதி.

ஒவ்வொன்றும் 55 காசு

இந்த 5 புத்தகங்களையும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 2·75 ந. பை M. O மூலம் அனுப்பவும்.

★

★ வீரபாண்டியன் தமிழ் வாசகம்

ஆசிரியர் : இராசாம்பாள் கோவிந்தராசன்

விலை 12 அணா.

★ சிறுவர் கணக்கு நூல்

ஆசிரியர் : பி. வீரராகவன்.

விலை 14 அணா.

★ இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசிரியர் :

M. விவேகானந்தா, B. Sc. L. T.

விலை 10 அணா.

★ சிறுவர் சமூக நூல்

(மாவட்டவாரியாக)

ஆசிரியர் : T. S. உமாபதி.

விலை ரூ. 1-14-0.

---

* அங்கீகாரமாகும் தேதியை பின்னர் அறிவிக்கப்படும்.

புதிய பாடத் திட்டப்படி

சமூக பாடப் பயிற்சி நூல்

(மாவட்ட வாரியாக)

ஆசிரியர் : T. S. உமாபதி.

ஒவ்வொன்றும் 55 காசு

இந்த 5 புத்தகங்களையும் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 2·75 ந. பை.–க்கு M. O. செய்யவும்.

★

★ சிறுவர் சமூக நூல்

4-ஆம் வகுப்பு

ஆசிரியர் :

த. சே. உமாபதி, M.A., L.T. (Dip. in Geog.)

மாவட்டங்கள்

1 சென்னை
2 செங்கற்பட்டு
3 தென்னார்க்காடு
4 வட ஆற்காடு
5 திருச்சி
6 தஞ்சாவூர்
7 கோயமுத்தூர்
8 சேலம்
9 நீலகிரி

ஒவ்வொன்றும் விலை ரூ. 1·87 ந. பை.

மாதிரிப் பிரதி வேண்டுவோர் (ஒவ்வொன்றுக்கும்) ரூ. 1·30 ந. பை. அனுப்பவும்.

---

* *அங்கீகாரமான தேதியைப் பின்னர் அறிவிக்கப்படும்.*

புதிய பாடத் திட்டப்படி:

சமூக
பாடப் பயிற்சி நூல்

4-ஆம் வகுப்பு

ஆசிரியர்:

த. சே. உமாபதி, M. A., L. T.

★

புத்தகத்தைப் பற்றிய குறிப்பு

சமூக பாடத்தைக் கற்பிக்கும்போது பாடங்களை மட்டும் கற்பிப்பது பயனற்றது என்பது அறிஞர்களின் கருத்து. இது பற்றியே பாடத் திட்டத்திற் செய்முறைகள் தனியே தரப்பட்டுள்ளன. அச் செய்முறைகளை மேற்கொள்ள ஆரம்பப் பள்ளிகள் எல்லாவற்றிலும் ஏற்ற சூழ்நிலை இருப்பது அரிது. ஆதலால், இத்தகைய **சமூக பாடப் பயிற்சி நூல்** *அத்தகைய குறையை நீக்கி குழந்தைகட்குச் சிறந்த முறையில் செய்முறைப் பயிற்சி அளிக்க உதவும் என்பது உறுதி. இந்நூல் சமூக பாட நூல்கள் எழுதுவதில் நீண்ட அனுபவமுள்ள திரு T. S.* **உமாபதி,** *அவர்களைக் கொண்டு தயாரிக்கப்பட்டிருப்பதால் இதன் சிறப்பைப் பற்றி அதிகம் கூற வேண்டுவதில்லை.*

பதிப்பாளர்.

மாவட்டங்கள்

1 சென்னை
2 தென்னார்க்காடு
3 வட ஆற்காடு
4 கோயமுத்தூர்
5 சேலம்
6 நீலகிரி
7 செங்கற்பட்டு
8 தஞ்சை
9 திருச்சி

ஒவ்வொன்றும் விலை 55 காசுகள்

புதிய பாடத் திட்டப்படி இயற்றப்பட்ட

2, 3-ம் வகுப்புகளுக்குரிய நூல்

சிறுவர் சமூக நூல்

ஆசிரியர் : பி. வீரராகவன்

இரண்டாம் வகுப்பு	*விலை*	0-10-0
மூன்றாம் வகுப்பு		0-12-0

இயற்கைப் பாடமும் தோட்ட வேலையும்

ஆசியர் : பி.வீரராகவன்

இரண்டாம் வகுப்பு	*விலை*	0-6-0
மூன்றாம் வகுப்பு		0-7-0

சிறுவர் கணக்கு நூல்

ஆசிரியர் : பி. வீரராகவன்

இரண்டாம் வகுப்பு	*விலை*	0-8-0

இந்த 5 புத்தகங்கள் மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூ. 1·75 ந. பை.-க்கு M. O. அனுப்பவும்.

உயர்தர ஆரம்பப் பள்ளிகளுக்கு :

வீரபாண்டியன் தமிழ் வாசகம்

ஆசிரியர் :

வித்துவான் வை. சுப்பிரமணியம்

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
ஆறும் வகுப்பு	0 13 0	3	10-4-'57
* ஏழாம் வகுப்பு	0 14 0	...	...

இந்த இரண்டு புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் 87 ந. பை. தபால் பில்லை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

** அங்கீகாரமாகும் தேதி பின்னர் அறிவிக்சப்படும்..*

புதுமுறை சங்கக் கணிதம்

ஆசிரியர்கள் :

V. K. *சேஷாத்திரி*, B. A., L. T.

V.. S. *லீலா*, B. A., B. T.

ஆறும் வகுப்பு	1 2 0	2	30-4-'58
ஏழாம் வகுப்பு	1 4 0	2	30-4-'58
எட்டாம் வகுப்பு	1 4 0	4	9-4-'58

இந்த மூன்று புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூபாய் 2-0-0 M. O. மூலம் அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

சமூக நூல்

ஆசிரியர் :

த. சே. உமாபதி, M. A., L. T.

	புத்தகத்தின் விலை	கெஜட் பக்கம்	அங்கீகாரமான தேதி
* ஆரும் வகுப்பு	1 4 0	38	19-5-'54

இதை மாதிரிப் பிரதியாக வேண்டுவோர் 62 ந. பை. தபால் பில்லையை அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

சமூக நூல் பயிற்சிப் புத்தகம்

ஆசிரியர் :

த. சே. உமாபதி, M. A., L. T.

ஆரும் வகுப்பு	0 10 0	(திருத்திய பதிப்பு)
ஏழாம் வகுப்பு	0 10 0	
எட்டாம் வகுப்பு	0 10 0	

இந்த மூன்று புத்தகங்களை மாதிரிப் பிரதிகளாக வேண்டுவோர் ரூபாய் 1-0-0 அனுப்பிப் பெற்றுக்கொள்ளவும்.

அநுமான முறை இலக்கணமும் உரைநடை ஆக்கமும்

ஆசிரியர் :

G. சந்திரமௌளீச்சுரன், M. A.

* எட்டாம் வகுப்பு	0 12 0	...	...

* அங்கீகாரமாகும் தேதி பின்னர் அறிவிக்கப்படும்.

முக்கிய அறிவிப்பு

" ஆரம்பக்கல்வி " பத்திரிகை இனும்

சென்ற 1958-59 ஆண்டுக்கு எமது வேண்டுகோளுக்கிணங்க, பற்பல எயிடெட் பாடசாலை மானேஜர்களும், தலைமை ஆசிரியர்களும், பஞ்சாயத்து போர்டு தலைமை ஆசிரியர்களும் எமது பாட புத்தகங்களை வைத்தும், சிலர் எமது இதர பாட புத்தகங்களைப் பாடசாலையில் வைத்தும், ஆதரித்தமைக்கு எமது அன்பு கலந்த நன்றியறிதலைத் தெரிவித்துக்கொள்ளுகிறோம்.

அம்மாதிரியே 1959-60 ஆண்டுக்கும் மீண்டும் எமது பாட புத்தகங்களைத் தொடர்ந்து வைத்து எமது பத்திரிகையை ஆதரிக்கும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

இவ்வாண்டும் எமது பாட புத்தகங்களைத் தொடர்ந்து வைத்துக் கொள்ளும் தலைமை ஆசிரியர்கள், 1959-60-க்குத் தொடர்ந்து வைத்துக்கொள்வதாக, எமது அலுவலகத்திற்கு மே மீ, 30-ம் தேதிக்குள் கடிதம் மூலம் தகவல் அனுப்பும்படி கேட்டுக்கொள்ளுகிறோம்.

அவ்விதம் தகவல் அனுப்பும் பாடசாலையின் பெயர்கள் 1959-60 ஆண்டுக்கு மறுபடியும் புதிதாக ரிஜிஸ்டர் செய்யப்பட்டு வழக்கம் போல் எமது ஆரம்பக்கல்வி பத்திரிகையை இனுமாகத் தொடர்ந்து அனுப்பப்படும். புத்தகங்கள் வாங்கும் புத்தகக்கடை ரசீதுகளை (Cash Bills) அலுவலகத்திற்கு 1959 ஜூன் மாதம் 30-ம் தேதிக்குள் அவசியம் அனுப்பி விடவும். சென்னை அலுவலகத்திற்கு அனுப்பப்படும் ஆர்டர்களுக்கு அதைக் கொண்டே பெயர்கள் ரிஜிஸ்டர் செய்து பத்திரிகையை அனுப்பப்படும்.

ஆர்டர்கள் அனுப்பும்போது கவனிக்கவேண்டியவை

முன்பு தபாற் கட்டணம் 5 தோலாவுக்கு 3 ந.பை.வாகயிருந்தது தற்போது 6 ந. பை-வாக உயர்த்தப்பட்டு இருக்கிறது. அதன் காரணமாக 20 ரூபாய்க்குப் பெறுமான, சுமார் நாற்பது புத்தகங்களை தபால் மூலம் அனுப்பப்படவேண்டுமானல் அதற்கு தபாற் செலவு 5 முதல் 6 ரூபாயாகின்றது. ஆதலால் புத்தகங்களை இரயில்வே பார்சல் மூலம் வரவழைத்துக்கொள்வது மிகவும் இலாபகரமானது. 20 ரூபாய்க்கு பெறுமான புத்தகத்திற்கு 50 ந.பை-க்கு மேல் இரயில்வே செலவு ஆகாது.

ஆதலால், நேரிடையாக சென்னை அலுவலகத்திற்கு ஆர்டர் அனுப்புபவர்கள், மறவாமல் அருகிலுள்ள இரயில்வே நிலையத்தின் (Raliway Station) பெயரை ஆர்டரில் குறிக்கும் படி கேட்டுக்கொள்ளுகிறோம். அப்படிக் குறிக்கப்படாமல் அனுப்பப்படும் ஆர்டர்கள் நிறுத்தி வைக்கப்பட்டுத் தங்கள் பதில் கிடைத்த பிறகே அனுப்பப்படும்.

கமிஷன் கிடைக்காவிட்டாலும் பரவாயில்லை, தபால் மூலம் தான் அனுப்ப வேண்டுமென விரும்புகிறவர்கள் தங்கள் ஆர்டர்களுடன், முன் பணம் 25% சத விகிதம் M. O. மூலம் அனுப்பவும்.

இரயில்வே நிலையம் (Railway Station) அருகாமையில் இல்லாதவர்களும், மொத்தமாகச் சென்னையிலிருந்து புத்தகங்களை வரவழைத்துக்கொள்ள வசதி இல்லாதவர்களும், தங்களுக்கு அருகாமையிலுள்ள புத்தக வியாபாரிகளிடம் ஆர்டர் கொடுத்து சில்லரையாக வாங்கிக்கொள்வது இலாபகரமானதாகும்.

மாதிரிப் பிரதிகள் அனுப்பப்படும் பாடசாலைகளை ரிஜிஸ்டர் செய்து வருகிறோம். குறிப்பிட்ட பாட புத்தகங்களை ஒரு முறைக்கு மேல் எக்காரணத்தைக் கொண்டும் மறுமுறை அனுப்ப முடியாது. அப்படி மறுபடியும் பணம் அனுப்பப்பட்டால் தபாற் செலவு கழித்துக்கொண்டு மீதித் தொகையை திருப்பி அனுப்பப்படும்.

பதிப்பாளர்.

★

வெங்கடேசன் பிரஸ், 2-65, பிராட்வே, சென்னை—1,